Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 25, 2021

வியாழக்கிழமை நவம்பர் 25, 2021 | ஒளி: 07 கதிர் 162 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## ‘மன்னாரில் 470 தொற்றாளர்கள்’

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தில், கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில், கடந்த 23 நாள்களில், 470 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என, மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார். தொடர்ச்சி P2

# மேதகு பிரபாகரனால் சபையில் சர்ச்சை

### மாவீரர்களுக்கு சபையில் தலைவணங்கி கஜேந்திரன் உரை

■ பா.நிரோஸ்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், போதைப் பொருள் வர்த்தகர் என, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறிய கருத்துக்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்து உரையாற்றிய செல்வராசா கஜேந்திரன், எமது தேசத்தின் விடுதலைக்காக முப்பது ஆண்டுகள் ஆயுதமேந்திப் போராடியிருந்த எமது தேசத்தின் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் எனக் கூறினார்.

இலங்கையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பின் தலைவரை தேசியத் தலைவர் என, செல்வராசா கஜேந்திரன் எம்.பி கூறியதாகக் கூறி, ஆளுந்தரப்பினர் கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதால் சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்ததோடு, கஜேந்திரனின் உரையை ஹன்சாட்டில் இருந்து நீக்க வேண்டும் எனவும் தொடர் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தின் குழுநிலை விவாதம் நேற்று (24) இடம்பெற்ற நிலையில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் சபையை, அத்தருணத்தில் வழிநடத்திக் கொண்டிருந்தார்.

இதன்போது உரையாற்றிய கஜேந்திரன் எம்.பி, “வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதைச் சுட்டிகாட்டிப் பேசிய கூட்டமைப்பு எம். பி. ஸ்ரீதரனின் உரையைக் கேட்டு பொறுத்துகொண்டிருக்க முடியாத இராணுவ துணைக்குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா,



தொடர்ச்சி P2

குறிஞ்சாக்கேணியில்

# காவுக்கு பின் எதற்கு சேவை?

### பஸ்ஸை மறித்து மக்கள் எதிர்ப்பு

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் படகுப் பாதை விபத்தில் 06 உயிர்களைக் காவு கொண்ட நிலையில்,, நேற்று (24) காலை 07 மணியளவில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை வழி மறித்த பொதுமக்கள், எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால், குறிஞ்சாக்கேணி பிரதான வீதியினூடான போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டது.

பாடசாலை மாணவர்கள், பாடசாலைக்குச் செல்வதற்காக காக்காமுனை, குறிஞ்சாக்கேணி, கச்சக்கொடித்தீவு ஊடாக கிண்ணியாவை சென்றடைவதற்கான தற்காலிக பஸ் சேவை நேற்றையதினம் ஈடுபடுத்தப்பட்டது. எனினும், இந்த பஸ் சேவையை 06 உயிர்கள் போனதன் பின்னரா போட வேண்டும், இதற்கு முன்னரே சேவையில் ஈடுபடுத்தியிருக்கலாமே எனக் கோஷமிட்டு பொதுமக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர். தொடர்ச்சி P2



ஹட்டன் பகுதியில்

# இலத்திரனியல் அட்டை மோசடிக் கும்பல்

### அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

■ கே.சுந்தரலிங்கம்

ஹட்டன் நகர பகுதியிலுள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி இயந்திரங்கள் மூலம் பணம் எடுக்க வருபவர்களின் இலத்திரனியல் அட்டைகளைக் கொண்டு, பல லட்சம் ரூபாய்களை மோசடி செய்த கும்பல் ஒன்று தொடர்பாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக வங்கி முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த மோசடிக் கும்பல், நீண்ட காலமாக மிகவும் சூட்சுமமான முறையில் இயந்திரத்தில் பணம் எடுக்க தெரியாத மற்றும் பணம் எடுக்க தடுமாறும் நபர்களை இலக்காக தொடர்ச்சி P2




கிண்ணியா – குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்காக, முல்லைத்தீவு – கூழாமுறிப்பு அரசினர் தமிழக் கலவன் பாடசாலையில், நேற்று (24) அஞ்சலி நிகழ்வு ஒன்று நடைபெற்றது. (படப்பிடிப்பு: செ. கீதாஞ்சன், சண்முகம் தவசீலன், எம்.றொசாந்த்)

# மாகாண சபைகளை ஒழித்துக் கட்டுங்கள்

### அரசாங்கத்திடம் அதாஉல்லா கோரிக்கை

■ பா.நிரோஸ்



இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக நாட்டுக்கு வழங்கப்பட்ட மாகாண சபைகள், நாட்டுக்கு பெரும் சுமையாக இருப்பதாக தெரிவித்த அரசாங்க ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல். எம். அதாஉல்லா, புதிய அரசியலமைப்பின் ஊடாக மாகாணசபைகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார். தொடர்ச்சி P2

மாகாணசபை தேர்தல் விவகாரம்

# தவறை ஒப்புகொண்டது கூட்டமைப்பு

■ பா.நிரோஸ்



நல்லாட்சி அரசாங்கத்துக்கு முண்டுகொடுத்த தாமும் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென கோரவில்லை என தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், இந்தத் தவறை பகிரங்கமாக ஏற்றுகொள்கிறோம் எனவும் அறிவித்தார். தொடர்ச்சி P2

# மனோ சுகம்



கொவிட் தொற்றினால் சுகவீனமுற்று கடந்த சுமார் பத்து நாட்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட எம். பியுமான மனோ கணேசன் பூரண சுகம் பெற்ற நிலையில் நேற்று (24) வீடு திரும்பினார்.

“சுகவீனமுற்ற வேளையில் எனக்கு ஆறுதல்களையும், தொடர்ச்சி P2

சட்டத்துக்கு உட்பட்டு

# ‘நினைவேந்தல்களை வீடுகளில் அனுஷ்டிக்கலாம்’

■ எஸ். நிதர்ஷன், எம்.றொசாந்த்



யுத்தத்தில் இழப்புகளைச் சந்தித்தவர்கள், சட்டத்துக்கு உட்பட்டு, நினைவேந்தல்களை வீடுகளில் அனுஷ்டிக்க முடியுமென, பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி, மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார். கிளிநொச்சியில், நேற்று (24) இடம்பெற்ற தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதை பொதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, தொடர்ச்சி P2

# படகு விபத்துக்கு கிண்ணியா மேயரே காரணம்

■ பா.நிரோஸ்



கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்துக்கு கிண்ணியா நகரசபை மேயரே முதலாவதாக பொறுப்புக்கூற வேண்டியவர் என தெரிவித்த இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, விபத்தில் உயிரிழந்த அப்பாவி பிள்ளைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றால், அந்த நகரசபை மேயரின் பதவியை ஜனாதிபதி உடனடியாகப் பறிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். தொடர்ச்சி P2

பட்ஜெட்டுக்கு ஆதரவு

# மு.கா எம்.பிக்கள் மூவர் இடைநிறுத்தம்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடத்தின் தீர்மானத்துக்கு அமைவாக செயற்படாத காரணத்தினால், அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் காசிம், ஹாபிஸ் நஸீர் அஹ்மட் ஆகிய மூவரும் கட்சியில் அவர்கள் வகித்து வரும் பதவிகளிலிருந்து உடனடியாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். தொடர்ச்சி P2



சுகாதாரத் துறை வேலைநிறுத்தத்தால்

# நோயாளிகள் கடும் அவதி

சுகாதாரத் துறையைச் சேர்ந்த 15 தொழிற்சங்கங்கள், நேற்று (24) முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்துள்ள 48 மணிநேர அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தால், வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை பெற வந்த நோயாளிகள் கடும் சிரமத்துக்குள்ளாகினர்.

இதனால், வைத்தியசாலைகளிலுள்ள மருந்து வழங்கும் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டதுடன், பெரும்பாலான வைத்தியசாலைகளில் நோயாளிகள் கூட்டம் அலைமோதியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

தாதியர்கள் மற்றும் துணை மருத்துவ சேவைகள் துறையில் உள்ள தொழிற்சங்கங்களால், பதவி உயர்வு முறைகேடுகள், சம்பள ஏற்றத்தாழ்வை நீக்குதல், முறையான பதவி உயர்வு முறையை உருவாக்குதல், தொடர்ச்சி P2

# இரசாயன உர இறக்குமதி தடை இரத்து

### தனியாருக்கு அனுமதி; அரசாங்கம் பின்வாங்காது

■ மகேஸ்வரி விஜயனந்தன்



பசுமை விவசாயத்துக்கு புத்துயிர் அளிக்கும் வகையில், இரசாயன பூஞ்சைக் கொல்லிகள் மற்றும் களை கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கு தடைவித்து, தொடர்ச்சி P2

சஹ்ரானை கைது செய்ய

# 340 அறிக்கைகள் சமர்ப்பிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான தற்கொலைதாரியான சஹ்ரான் ஹாசிம் உள்ளிட்ட கடும்போக்குவாதிகளை உடனடியாக கைது செய்யுமாறு, 340 அறிக்கைகளை சமர்ப்பித்து கோரிக்கை விடுக்கப்பட்டதாக கொழும்பு மேல் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறான கோரிக்கை விடுக்கப்பட்டதாக முன்னாள் அரச புலனாய்வு தலைமை அதிகாரி சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை தடுப்பதற்கு நடவடிக்கை தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மேதகு பிரபாகரனால் சபையில் சர்ச்சை

தமிழர்களுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய எமது தேசத்தின் தலைவர் பிரபாகரனை போதைப்பொருள் வர்த்தகர் என கூறியிருந்ததை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபோல, "அதியுயர் சபையில் பயங்கரவாதி ஒருவரைத் தேசியத் தலைவராக சித்தரித்துப் பேசுகின்றார். உங்களுக்கு (வேலுகுமார்) மொழிப்பிரச்சினை இல்லை. கஜேந்திரன் எம்.பி கூறிய விடயங்கள் விளங்காமல் இருந்திருக்காது. ஆகவே அதனை ஹன்சார்ட்டில் இருந்து நீக்குங்கள்" என்றார்.

இதன்போது பதிலளித்த வேலுகுமார் எம்.பி, "செல்வராசா கஜேந்திரனுக்கு உள்ள கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரத்தில் என்னால் தலையிட முடியாது. நான் எப்படி அதில் தலையிட முடியும்? எவ்வாறாயினும் உங்களின் கோரிக்கையை சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு செல்கிறேன்" என்றார்.

இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள், வேலுகுமார் எம்.பியுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய ஆளுந்தரப்பு உறுப்பினர் மொஹம்மட் முஸம்மில் எம்.பி, "விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடைசெய்யப்பட்ட இயக்கம். இந்த நாட்டில் இலட்சக்கணக்கான மக்களை கொலைசெய்த ஒருவரை வீரராக்கி இந்த சபையில் பேச முடியாது. குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் கருத்து மக்கள் மத்தியில் வைராக்கியத்தை பரப்பும். இவ்வாறான உரைகளை சபையில் அனுமதிக்க முடியாது. எனவே உரையை ஹன்சாட்டில் இருந்து நீக்குங்கள" என்றார்.

"உங்கள் கோரிக்கையை சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு செல்கிறேன்" என வேலுகுமார் எம்.பி பதிலளித்தார்.

எனினும் மீண்டும் குறுக்கீடு செய்த முஸம்மில் எம்.பி, இப்போது நீங்கள் தான் சபையை வழிநடத்துகிறீர்கள். எனவே சபாநாயகர் வந்து இதனை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டியதில்லை. அதற்கான அதிகாரம் உங்களுக்கு இருக்கிறது. ஹன்சாட்டில் இருந்து அதனை நீக்குங்கள்" என்றார்.

"என்னால் சபாநாயகருக்கு முறையிட மட்டுமே முடியும், எனது அதிகார பரப்புக்குட்பட்ட விடயங்களையே என்னால் செய்ய முடியும்" என வேலுகுமார் மீண்டும் பதிலளித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி, "இந்த சபையில் பல்வேறு கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒரு சிலரது கருத்துக்களை சிலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால், அதனை நிராகரிக்க முடியாது. பல்வேறு சமூகத்தின் பிரதிநிதிகளாக இங்கு பலர் உள்ளனர்.

ஒரு உறுப்பினர் அவரது நிலைப்பாட்டை முன்வைக்கின்ற நிலையில், அவரின் குரலை மௌனிக்க இடமளிக்க கூடாது" என்றார்.

"பெரும்பான்மை உறுப்பினர்களுக்கு அவரது கருத்து பிடிக்கவில்லை என்பதற்காக அவரது குரலை மௌனிக்க செய்யக்கூடாது என்பதை கேட்டுக்கொள்கின்றேன்" எனவும் கூறினார்.

"பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள வரப்பிரசாதங்களை பயன்படுத்தி பயங்கரவாதத் தலைவர் ஒருவரை தேசியத் தலைவராக சபையில் சித்தரிக்க முடியாது. பிரபாகரனை நெல்சன் மண்டேலா, மகாத்மா காந்தியுடன் ஒப்பிடவே இவர்கள் முயற்சிக்கிறார்கள். ஆனால். பிரபாகரன் ஒரு கொலைகாரன், பயங்கரவாதி. இதனை விளங்கிக்கொள்ள வேண்டும்" என ஆளுங்கட்சி பின்வரிசை எம்.பிகள் கூறினார்கள்.

# மனோ குணம்

ஆலோசனைகளையும் தெரிவித்து, மத வழிபாடுகளிலும் ஈடுபட்டு, அன்பையும், நம்பிக்கையையும் நேரடியாகவும், ஊடகங்கள், தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் தெரிவித்த கட்சி, கூட்டணி, நண்பர்கள், ஆதரவாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழும் அன்புள்ளங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

# மு.கா எம்.பிக்கள் மூவர் இடைநிறுத்தம்

கட்சித் தலைவரினால் நேற்று (24) வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற் குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பாராளுமன்றத்தில், கடந்த திங்கட்கிழமை (22) இடம்பெற்ற வரவு -செலவு திட்ட வாக்கெடுப்பின் போது, கட்சியின் உச்ச பீடத்தின் தீர்மானத்திற்கமைவாக செயற்படாததனால் மூவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், கட்சியின் தீர்மானத்தைப் புறக்கணித்து நடந்ததற்காக அவர்களிடம் விளக்கம் கோரப்படவுள்ளதாகவும் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

# 340 அறிக்கைகள் சமர்ப்பிப்பு

எடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிரான வழக்கு நேற்று (24) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகளான நாமல் பலல்லே, ஆதித்ய பட்டபெதிகே மற்றும் மொஹமட் இஸ்ஸதீன் ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் குழாம் முன்னிலையில் சாட்சி விசாரணை, நேற்று (24) ஆரம்பமானது. இதன் போதே நிலந்த ஜயவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சஹ்ரான் ஹாசிம் தொடர்பிலான சுமார் 340 அறிக்கைகளை அவ்வேளையில் பாதுகாப்பு செயலாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளிடம் சமர்ப்பித்து, அவர்களை கைது செய்யுமாறு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டது என முன்னாள் அரச புலனாய்வு தலைமை அதிகாரி சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, மன்றில் தெரிவித்தார்.

உயித்த ஞாயிறு தாக்கல் மேற்கொள்ளப்படும் வரை அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வண்ணாத்துவில்லு பிரதேசத்தில் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டமை மற்றும் மாவனெல்லையில் புத்தர் சிலைகள் சேதப்படுத்தப்பட்டமை போன்ற சம்பவங்களின் போது, திரட்டிய புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில், சஹ்ரான் ஹாசிமுடன் சமய கடும்போக்குவாதிகளின் பெயர் மற்றும் முகவரியுடன் தகவல்களை வழங்கியதாக அவர் கூறியுள்ளார்.

# காவுக்கு பின் எதற்கு சேவை?

இதன்போது, பஸ் நகர முடியாதவாறு பஸ்ஸின் முன்னால் கற்களை இட்டு, மக்கள் தடைப்படுத்தினர். இதனால், காக்காமுனையிலிருந்து பாடசாலை செல்வதற்காக சுமார் 15 க்கும் மேற்பட்ட மாணவர்கள் குறிஞ்சாக்கேணியில் இறக்கப்பட்டனர். அங்கியிருந்து அவர்கள் வீடு சென்றனர். சிலர் வேறு மார்க்கத்தினூடாக பாடசாலை சென்றனர்.

இதனையடுத்து, அவ்விடத்துக்கு விரைந்த கிண்ணியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கிண்ணியா இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகள், எதிர்ப்பாளர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் கோரிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதையடுத்து எதிர்ப்பு போராட்டம் கைவிடப்பட்டது.

## இலத்திரனியல் அட்டை மோசடிக் கும்பல்

கொண்டே இந்த மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தானியக்க இயந்திரங்களில் பணம் எடுப்பவர்கள் போல பாவனை செய்து நிற்கும் குறித்த மோசடிக் கும்பல், இயந்திரங்களில் பணம் எடுக்கத் தெரியாதவர்கள் உதவி கேட்கும் போது, அவர்களின் அட்டையை எடுத்துக்கொண்டு தம்மிடமுள்ள செல்லுபடியாகாத அட்டையை அவர்களிடம் வழங்குகின்றனர்.

பின்னர் வேறு வங்கி இயந்திரங்களுக்குச் சென்று, உரிய நபரின் கணக்கில் உள்ள பணத்தைத் திருடிவருவதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் ஒரு சிலர் மாத்திரம் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளதாகவும் ஏனையவர்கள் வெட்கம் மற்றும் தங்களுடைய தவறு காரணமாக முறைபாடுகள் செய்வதில்லை என்றும் தெரிவித்த ஹட்டன் பொலிஸார், சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று முன்தினமும் இரு வங்கிகளில் இவ்வாறான கொள்ளை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகிறது.

இவ்வாறான கும்பல் நாட்டில் பல பகுதிகளிலும் தானியங்கி இயந்திரங்கள் மற்றும் ஈசிகேஸ் என்ற போர்வையிலும் மோசடியில் ஈடுபட்டு வருவதால், பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என வங்கி முகாமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹட்டனில் கையகப்படுத்திக்கொண்ட இலத்திரனியல் அட்டைகள் மூலம் நாட்டின் தூர உள்ள மாவட்டங்களில் உள்ள தானியங்கி இயந்திரங்களில் பணம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் எனவே பொதுவாக எல்லா மாவட்டங்களிம் உள்ள மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என வங்கி முகாமையாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## நோயாளிகள் கடும் அவதி

சுகாதார நிர்வாக சேவையை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தாதியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், மருந்து விநியோகிப்பவர்கள், மருந்தாளர்கள், எக்ஸ்ேர படப்பிடிப்பாளர்கள் உள்ளிட்டவர்களே வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்காரணமாக, வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படும் மருந்துகள் மற்றும் ஆய்வகூட சேவைகளை நோயாளிகள் வெளியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அறியமுடிகிறது.

இந்த வேலைநிறுத்தப் போராட்டம் இன்றையதினமும் (25) தொடரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாகாண சபைகளை ஒழித்துக் கட்டுங்கள்

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்தில் யாரையும் குறை சொல்ல வேண்டும் என்கிற நோக்கம் எமக்கு இல்லை. ஆனால், மாகாணசபைகளுக்கு கீழ் இருக்கின்ற கிண்ணியா நகரசபை, பிரதேசசபையால் இந்த படகு சேவையை பாதுகாப்பாக முன்னெடுக்க முடியாததையிட்டு, திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் கவலையடைகிறேன் என்றார்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு, பின்னர் இனவாதிகளால் தடுக்கப்பட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சாய்ந்தமருத்துக்கான தனியான பிரதேசசபை மீண்டும் வழங்க வேண்டும் எனவும் இதன்போது தெரிவித்தார்.

மாகாணசபை என்பது நாட்டுக்கு தேவையில்லாது சுமை. இதற்கு மக்களின் பணம் வீணாக செலவிடப்படுகிறது. பிரித்தானியர் காலத்தில் இருந்து நாட்டிலுள்ள அனைத்து இனங்களுக்கு அரசியலமைப்பு ஊடாக உரிமைகள் பகிரப்பட்டுள்ளன என குறிப்பிட்டார்.

தமிழர்களுக்கு தேவையானதை வழங்க முடியுமாக இருந்தால், முஸ்லிம்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட நாட்டில் பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியுமாக இருந்தால் எதற்காக நாட்டில் மாகாணசபைகள்? எனவும் கேள்வி எழுப்பினார்.

ஒரே நாடு, ஒரே சட்டம் என்கிறார்கள். ஆனால், மாகாண சபைகளில் 10 சட்டங்கள் இருக்கின்றன. மாகாண சபைகளை இல்லாதொழித்து நாட்டுக்கு தேவையான சிறந்த அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் எனவும் அரசாங்கத்திடம் கேட்டுகொண்டார்.

## தவறை ஒப்புகொண்டது கூட்டமைப்பு

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்று (24) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், தேர்தல் திருத்தம் வரும்வரை அல்லது அரசியலமைப்பில் திருத்தம் வரும்வரை மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாது என கூறியிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

"நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மாகாணசபை தேர்தல் நடத்தப்படவில்லை. அந்த அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்துவந்த நாமும் அதனை வலியுறுத்தவில்லை என்பதை பகிரங்கமாக ஏற்றுகொள்கிறேன். இந்த தவறை ஏற்றுகொள்கிறோம்.

நல்லாட்சி அரசாங்கம் செய்த தவறை இந்த அரசாங்கமும் செய்யப்போகிறதா? ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று இரு வருடங்களும், பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்று ஒரு வருடங்களும் கடந்துள்ளன. இவ்வாறான நிலையில் கடந்த அரசாங்கம் செய்த தவறை விடுத்து மாகாணசபை தேர்தலை இந்த அரசாங்கம் நடத்த முன்வர வேண்டும்" என்றார்.

## 'நினைவேந்தல்களை வீடுகளில் அனுஷ்டிக்கலாம்'

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை வரலாற்றிலே முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் என்றவகையிலே, இம்முறையே விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

"அம்பாறை மாவட்டத்தில் தமிழரின் இருப்பு என்பது கேள்விக்குறியாகி இருக்கிறது. திருகோணமலையில் ஓர் ஆசனம் தான் கிடைக்கிறது. இன்னும் சில வருடங்களில் அதுவும் கிடைக்குமா என்பது கேள்விக்குறி.

மேலும், முள்ளிவாய்க்கால் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் சரியான காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்த அவர், தான் உட்பட 16 பேர் நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்ததாகவும் ஆனால் எதுவுமே நடக்கவில்லை எனவும் கூறினார்.

இந்நிகழ்வுக்கு பின்னர், நினைவேந்தல் தொடர்பாக நீதிமன்றத் தடையுத்தரவு பெறப்படுகின்றமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் இராஜாங்க அமைச்சரிடம் கேள்வி எழுப்பிய போது, "யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், இழப்புகளை சந்தித்தவர்கள் சட்டத்துக்கு உட்பட்டு, வீடுகளில் நினைவேந்தல்களை அனுஷ்டிக்க முடியும். அவர்களுக்கு நாம் இந்த இடத்திலே ஆறுதலை சொல்ல விரும்புகிறோம்" என்றார்.

## 'மன்னாரில் 470 தொற்றாளர்கள்'

மன்னார் மாவட்ட கொரோனா நிலைவரம் தொடர்பாக, நேற்று (24), விடுத்துள்ள கொரோனா நிலைவர அறிக்கையிலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், மன்னார் மாவட்டத்தில், நேற்று முன்தினம் (23), மேலும் புதிதாக 14 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை, 470 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## படகு விபத்துக்கு கிண்ணியா மேயரே காரணம்

"எதிர்க்கட்சி எம்.பி இம்ரான் மஹ்ரூபின் மைத்துனரே, படகுச் சேவைக்கு அனுமதியை வழங்கிய கிண்ணியா மேயர். விபத்துக்குள்ளான படகு சேவையை முன்னெடுத்தவரும் இம்ரானின் நெருங்கிய உறவினர்" எனவும் லன்சா எம்.பி சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (24) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

விபத்தில் உயிரிழந்த அனைவருக்கும் அரசாங்கத்தின் சார்பில் அஞ்சலிகளைச் செலுத்துகிறேன். விபத்தில் சிக்கி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறேன் என்றார்.

நீண்ட காலங்களால் இங்கு பாலம் இல்லை என்பதால் மக்கள் பாரிய சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பலர் இதற்கு அடிக்கல் நாட்டியிருந்தபோதிலும், அதனை நிர்மாணிக்கவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் இந்த பாலத்தை நிர்மாணித்துத்தர வேண்டும் என என்னிடம் கோரிக்கை விடுத்தார் என குறிப்பிட்டார்.

இதன்படி இந்த பாலத்தை அமைக்கும்போது மாற்றுப் பாதையாக 3 கிலோமீற்றர் வரையிலான பாதையைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக இப்பாதையை அமைக்க நெடுஞ்சாலைகள் அமைச்சும் அனுமதி வழங்கியிருந்தது எனவும் தெரிவித்தார்.

படகு சேவைக்கு அனுமதி வழங்க வேண்டாம் என கூறியும், அனுமதி வழங்கிய கிண்ணியா நகரசபையே இந்த விபத்துக்கு முதலாவது பொறுப்புக்கூற வேண்டியவர்கள். கிண்ணியா மேயரின் செயற்பாடுகளே இந்த விபத்துக்குக் காரணம் எனவும் கூறிய இராஜாங்க அமைச்சர், படகு சேவையை முன்னெடுப்பதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் கிண்ணியா நகரசபைக்கு இல்லை. இல்லாத அதிகாரத்தைப் பயன்படுத்தி படகு சேவைக்கு அனுமதியை வழங்கியிருந்தது.

எஸ்.எம். தௌபீக் எம்.பி பாலத்தை அமைக்க அடிக்கல்லை மாத்திரமே நாட்டினார். எனினும் விபத்துக்குள்ளான படகு சேவையை முன்னெடுக்க இம்ரான் மஹ்ரூப் எம்.பியே அனுமதி வழங்கியிருந்தார். எனவே பாராளுமன்றத்தை தவறாக வழிநடத்தி இம்ரான் மஹ்ரூப் எம்.பி அரசியல் செய்ய வேண்டாம் எனவும், இம்ரான் மஹ்ரூப் எம்.பியும் இந்த விபத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

அப்பம் சுடுவதுபோல பாலத்தை அமைக்க முடியாது. எவ்வாறாயினும் இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் மீண்டும் நிகழாதிருக்க குறித்த பாலத்தை விரைவில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## இரசாயன உர இறக்குமதித் தடை இரத்து

ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்படுவதாகத் தெரிவித்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, நேற்றிலிருந்து தனியார் பிரிவுகள் இரசாயன உரத்தை இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படுவதாகத் தெரிவித்தார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (24) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே விவசாயத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், இரசாயன உரத்தை தனியார் பிரிவுகள் இறக்குமதி செய்வது தொடர்பான வர்த்தமானி வெகுவிரைவில் வெளியிடப்படும் என்றும் ஆனால், இரசாயன உரங்களை இறக்குமதி செய்யாது பசுமை விவசாயமே என்ற அரசாங்கத்தின் கொள்கை எப்போதும் மாறாது என்றும் குறிப்பிட்டார். அத்துடன், பசுமை விவசாயத்துக்காகவே, அரசாங்கத்தின் உர நிவாரணம், விதை மானியம், நெல்லுக்கான உத்தரவாத விலை, தொழிநுட்பம், அதற்கான சந்தை உள்ளிட்டவைகள் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். அரசாங்கம் ஒருபோதும் இரசாயன உர இறக்குமதியை முன்னெடுக்காது என்பதுடன், அதற்கான மானியத்தையும் வழங்காது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக பாதிப்பை எதிர்நோக்கியுள்ள விவசாயிகளுக்கு, விவசாய காப்புறுதிச் சபை ஊடாக நட்டஈட்டை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கூறினார்.

மேலும், சீரற்ற வானிலையால் நெல் மாத்திரமின்றி மரக்கறி உள்ளிட்ட ஏனைய உற்பத்தியாளர்களும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகவும் நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால் மரக்கறிச் செய்கை பாதிப்படைந்துள்ளதுடன், தற்போது மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது என்றார்.

ஊடகவியலாளர்களுக்கும்

# ஒழுக்க விதிகளை தயாரிக்க அங்கிகாரம்

ஊடகவியலாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் கொள்கை வகுப்புக்கள், ஒழுக்க விதிகளைத் தயாரிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

வெகுசன ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல் துறையின் உலகளாவிய வளர்ச்சியை கருத்தில் கொண்டு இலங்கையில் ஊடகங்களைத் தரப்படுத்துவதற்காக காணப்படும் சட்டங்களிலேயே திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகபெரும சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

கட்டளைச் சட்டங்கள், சர்வதேச கட்டளைச் சட்டங்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்களின் செயற்பாடு மற்றும் சமூக, கலாச்சார தனித்துவங்கள் போன்ற துறைகளில் விசேட கவனத்தைச் செலுத்தி இலங்கைக்கான வெகுசன ஊடக கொள்கையொன்றை தயாரிக்கும் வகையிலேயே இந்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதற்கு இணையாக உயரிய தொழில்வாண்மையுடன் கூடிய ஊடக தொழில் வல்லுநர்களை உருவாக்கத் தேவையான பின்னணியை உருவாக்கல், சமூக ஊடகங்கள் உள்ளிட்ட புதிய ஊடகங்களைப் பயன்படுத்தல் மற்றும் நடத்தைகள் தொடர்பான அறிவு, புரிதல் மற்றும் தொடர்பான உத்திகளை சமூகமயப்படுத்தல், டிஜிட்டல் தொழிநுட்பத்திற்கு இசைவாக்கமடைதல் போன்றவற்றுக்குத் தேவையான வசதியளித்தல் தொடர்பாக தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

சமகாலத்திற்குப் பொருத்தமான வகையில் ஊடகவியலாளர்களுக்கும் வெகுசன ஊடகங்களுக்கும் ஏற்புடையதாகக் காணப்படும் சட்டத் திருத்தங்கள் மற்றும் கொள்கைகள் மற்றும் ஒழுக்கவிதிகளைத் தயாரிக்க வேண்டிய தேவை அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த அரச மற்றும் தனியார் துறை ஊடகங்கள், சந்தைப்படுத்தல், கல்வி ரீதியான, சட்டங்கள், நிர்வாகம் மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளில் அனுபவம் வாய்ந்த நபர்களின் பிரதிநிதித்துவத்துடனான குழுவொன்றை நியமிக்கப்படவுள்ளது.

# குட்டியாராச்சியின் மனநலத்தை பரிசோதிக்கவும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

பா.நிரோஸ்

பாராளுமன்றத்தில் மோசமாக செயற்பட்டுகொண்டிருக்கும் ஆளுங்கட்சி எம்.பி திஸ்ஸ குட்டியாராச்சியின் மனநலம் தொடர்பில் வைத்திய சோதனைகளை மேற்கொள்ள வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள சபையில் கோரிக்கை விடுத்தார்.



பாராளுமன்றத்தின் நேற்றைய (24) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், பெண்களை அவமதிக்கும் வகையில் அதியுயர் சபையில் உரையாற்றிய ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பின் திஸ்ஸ குட்டியாராச்சி தொடர்பில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தோம் என்றார். இதன்படி சபாநாயகர் திஸ்ஸ குட்டியாராச்சி தொடர்பில் அறிவிப்பொன்றையும் சபையில் விடுத்திருந்தார். எனினும் திஸ்ஸ குட்டியாராச்சி தொடர்ந்து இந்த விடயத்தை விவாதித்து இழுத்தடித்து வருகிறார். நிலையியற் கட்டளையின் பிரகாரம் திஸ்ஸ குட்டியராச்சி மன்னிப்பு கேட்பாரா? அவ்வாறு இல்லை என்றால் சபாநாயகர் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பாரா? எனவும் கேள்வி எழுப்பினார்.

திஸ்ஸ குட்டியாராச்சி பாராளுமன்றத்தில் தொடர்ந்து மோசமாக செயற்படுவதால், அவரின் மனநலம் தொடர்பில் வைத்திய சோதனைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தலதா அத்துகோர சபையில் கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதிலளித்த பிரதி சபாநாயகர் ரஞ்சித்சியம்பலாப்பிட்டிய, இந்த கோரிக்கையை சபாநாயகருக்கு தெரியப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

அனைத்து

# மதங்களையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு

பா.நிரோஸ்

அரசியலமைப்புக்கு அமைய நாட்டிலுள்ள அனைத்து மதங்களையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பென பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

வரவு செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், நாட்டிலுள்ள அனைத்து மதங்களையும் அரசியலமைப்புக்கு இணங்க பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை. இதன்படி அனைத்து மத வழிபாட்டு தலங்களை மேம்படுத்தவும், ஒழுக்கமுள்ள சமூகத்தை கட்டியெழுப்பவும் பல்வேறு திட்டங்களை புத்த சாசன, மத விவகார, கலாசார அலுவல்கள் அமைச்சு முன்னெடுக்கிறது எனவும் தெரித்தார்.



நாட்டின் நிலையான அபிவிருத்திக்கு பொருளாதார அபிவிருத்தியை போல, ஆன்மீக அபிவிருத்தியும் அவசியம் எனவும், புத்த தர்மத்தை திரிபு படுத்தாமல் பாதுகாப்பது, புத்த சாசனத்தை பாதுகாப்பது முக்கியமானது என்றும் கூறினார்.



# விமான போக்குவரத்தை மேலும் அதிகரிக்க நடவடிக்கை

இலங்கையின் விமான போக்குவரத்து எதிர்வரும் வாரங்களில் மேலும் அதிகரிக்குமென விமான சேவை நிலையம் தெரிவித்துள்ளது. நான்கு புதிய விமான நிறுவனங்கள் டிசெம்பரில் இருந்து நாட்டுக்கு நேரடி விமான சேவையை தொடங்கவுள்ள நிலையில், இந்த அதிகரிப்பு ஏற்படுமென தெரிவிக்கப்படுகிறது.

> **சரக்கு விமானங்களில் எட்டு விமான நிறுவனங்கள் மீண்டும் செயற்பட தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.அனைத்து விமான நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது**

அதன்படி, டிசம்பர் 3 ஆம் திகதி, ரஷ்யா மற்றும் கஜகஸ்தானில் இருந்தும் வாரத்துக்கு இரு முறை இலங்கைக்கு விமான சேவையை முன்னெடுக்கவுள்ளன.

அதேவேளை, போலந்தில் இருந்து டிசம்பர் 8 முதல் விமானங்கள் இயக்கப்படவுள்ளன. மேலும் இத்தாலியில் இருந்து டிசம்பர் 15ஆம் திகதி முதல் கொழும்புக்கான விமான சேவை ஆரம்பமாகவுள்ளது.

இதேநேரம், கொரோனா தொற்றுக்கு முன்னர் இலங்கைக்கு விமானங்களை இயக்கிய 37 விமான நிறுவனங்களில் 17 பயணிகள் விமானங்கள் தங்கள் சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளன எனவும் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

சரக்கு விமானங்களில் எட்டு விமான நிறுவனங்கள் மீண்டும் செயற்பட தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.அனைத்து விமான நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு பிரித்தானியா கண்டனம்

மரணதண்டனை விதிக்கப்பட்ட கொலையாளிக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியதாகவும், காணாமல்போனோர் அலுவலகம் போன்ற சுயாதீன நிறுவனங்களை வழிநடத்த சர்ச்சைக்குரிய நபர்களை நியமித்தற்கும் பிரித்தானியா கவலை தெரிவித்துள்ளது.



மேலும் பல மனித உரிமை வழக்குகளில் பொறுப்புக் கூறலைத் தடுக்கும் நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்தது.

2021ஆம் ஆண்டின் முதல் பாதியில் இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருவதாக பிரித்தானியா கவலை தெரிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம், தமிழ் மற்றும் முஸ்லிம் நலன்புரி அமைப்புக்கள் உட்பட பல குழுக்களைத் தடைசெய்து, குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள சமூகங்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகள் மீதான கட்டுப்பாடுகளுடன் சிறுபான்மைக் குழுக்களை அரசாங்கம் ஓரங்கட்டுவது தொடர்கிறது என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

மேலும் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் (OHCHR) அறிக்கையானது, கடந்த வருடத்தில் வெளிப்படும் போக்குகள் குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது என குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு, மோசமடைந்து வரும் மனித உரிமைகள் நிலைமை மற்றும் எதிர்கால மீறல்களின் கணிசமாக உயர்ந்த ஆபத்தைக் காட்டுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை (UNHRC) மார்ச் மாதம் 46/1 தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது, இந்தப் போக்குகள் குறித்து தீவிர கவலையை வெளிப்படுத்தியதுடன், இலங்கையில் நடைபெறும் அனைத்து மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கும் விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தை பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் வலியுறுத்தியது.

பாதுகாப்புப் படைகள் மனித உரிமை ஆர்வலர்கள் மீதான அவர்களின் கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துதல், பல தன்னிச்சையான கைதுகளுடன் அதிகரித்தன. நீதிமன்றக் கண்காணிப்பு அல்லது அடுத்த செயன்முறைக்குத் தேவையில்லாமல், தனி நபர்களை கைது செய்து மறுவாழ்வு மையங்களுக்கு அனுப்பும் அதிகாரங்களுடன் புதிய விதிமுறைகளை அரசாங்கம் முன்மொழிந்துள்ளது என்று பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் தெரிவித்துள்ளது.

# கொரோனா மரணங்கள் அதிகரிப்பு

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி நேற்றையதினம் மேலும் 23 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

11 ஆண்களும் 12 பெண்களும் உயிரிழந்துள்ளனர் என்பதுடன், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 14,205 ஆக அதிகரித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 18 பேரும் 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 04 பேரும் 30 வயதுக்குட்பட்டோரில் ஒருவரும் மரணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 8 அமைச்சுகளின் செயலாளர்கள் நியமனங்களுக்கு அனுமதி

எட்டு அமைச்சுகளின் செயலாளர்களின் நியமனத்திற்கு பாராளுமன்ற உயர் பதவிகள் தொடர்பான குழுவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



பாராளுமன்ற உயர் பதவிகள் தொடர்பிலான குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் (23) நடைபெற்றது. இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார். அனுமதி வழங்கப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவும் உள்ளடங்குகின்றார்.

அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சு, திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு, கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு ஆகியவற்றிற்கான செயலாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்கால கொடுப்பனவை வழங்குமாறு

# அரசாங்கத்திடம் கோருகிறார் வாசுதேவ

பா.நிரோஸ்



அரசாங்க ஊழியர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு இடைக்கால கொடுப்பனவு ஒன்றை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு வரவு -செலவு திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசாங்க ஊழியர்கள் நாட்டுக்கு சுமை என்று நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பில் சபையில் பேசப்பட்டது. உண்மைதான் பெற்றோர்களுக்கு பிள்ளைகள் சுமைதான். ஆனால் சுமை என்பதற்காக பிள்ளைகளை தூக்கியெறிவது இல்லை எனவும் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்கள் சுமை என்று கூறியதால், அரச ஊழியர்கள் தூக்கியெறிப்படுவார்கள் என்று நினைப்பது தவறு. கொரோனா வைரஸால் நாட்டை இயல்பாக நிர்வகிக்க முடியவில்லை. அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று எந்நேரமும் பேசுவதில் பயனில்லை. நாட்டின் நிலைமைகள் தொடர்பில் சிந்தியுங்கள் என்றார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்தே நாட்டில் கொரோனா வைரஸ் பரவி வருகிறது. எவ்வாறாயினும் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றும் எனவும் தெரிவித்தார். உண்மையில் அனைவரும் பெரும் சிரரமான நிலையில் வாழ்ந்து வருகிறோம். சம்பளத்தை பெறுபவர்கள் மிகவும் சிரமத்துக்கு முகங்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக இவ்வாறான நிலையில் அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்கால கொடுப்பனவை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் ஆராய வேண்டும். எனினும் அரசாங்கத்தின் வருமானம் குறைடைவந்துள்ளது என்றார்.

குறிஞ்சாக்கேணி படகு விபத்து;

# கடும் கவலையைத் தெரிவித்தது கூட்டமைப்பு

பா.நிரோஸ்

கிண்ணியா - குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆழ்ந்த கவலையை சபையில் தெரிவித்தது.



2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு நேற்று (24) உரையாற்றிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விபத்து மிகப்பெரிய கவலையையும், அவலத்தையும் நாட்டில் ஏற்படுத்தியுள்ளதென மேலும் தெரிவித்தார்.

இந்த விபத்தில் 4 மாணவர்கள் உள்ளிட்ட 6 பேர் உயிரிழந்துள்ளமை மோசமான கவலைத் தரக்கூடிய சம்பவமாக இருக்கிறது. இஸ்லாமிய குழந்தைகள், சகோதரர்கள் இந்த விபத்தில் இறந்தமைக்கு நாம் எமது ஆழ்ந்த கவலையை இந்த சபையின் ஊடாக தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார்.

# அரச ஊழியர்களை கைது செய்ய அரசாங்கம் தயாராகிறது

பா.நிரோஸ்

அரசாங்கத்தை விமர்சிக்கும் அரச ஊழியர்களை கைது செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அரச ஊழியர்கள் அரசாங்கத்தை விமர்சிக்கத் தடை விதித்து வெளியிடப்பட்டிருக்கும் சுற்றுநிரூபத்தை, அரசாங்கம் இரத்து செய்ய வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.



2021ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசாங்க ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 ஆக அதிகரித்துள்ளது. இதுவொரு பொருத்தமற்ற தீர்மானம். இதனை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுகொண்டார்.

சிவில் சமூக செயற்பாடுகளை தற்போதைய அரசாங்கம் கைது செய்து வருவதுபோல அரசாங்க ஊழியர்களையும் அரசாங்கம் கைது செய்து சிறையில் அடைக்க முயற்சிக்கிறது. அரசாங்கத்தை விமர்சிக்கும் அரச ஊழியர்களை கைது செய்வதற்கான திட்டங்களை அரசாங்கம் வகுத்து வருகிறது. அரசாங்கத்தை விமர்சிக்க வேண்டாம் என அரசாங்க ஊழியர்களுக்கு வெளியிட்டுள்ள சுற்று நிரூபத்தை அரசாங்கம் உடனடியாக இரத்து செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை அரசாங்கம் அதிகரித்துள்ளதால், அரசாங்க சேவைக்கு செல்ல நாட்டிலுள்ள அதிகளவான இளைஞர்களுக்கு அரசாங்க சேவையில் இணைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்தின் மீதான இளைஞர்களின் கோபம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது எனவும் தெரிவித்தார். தீர்மானம் எடுப்பதில் உள்ள பிரச்சினையால் அரசாங்கம் எடுத்த அத்தனை தீர்மானங்களையும் திரும்பப் பெற்று வருகிறது.

படகு விபத்துத் தொடர்பில்

# 'பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும்'

## ஆளுநரிடம் கோரிக்கை

■ வா.கிருஸ்ணா

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகுப் பாதை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் பக்கச்சார்பற்ற விசாரணையை முன்னெடுக்க வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அச்சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட பொதுச் செயலாளருமான பொன்னுத்துரை உதயரூபன், இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்தப் படகு விபத்தில் மாணவர்கள் உட்பட ஆசியர் ஒருவரும் பலியானதையிட்டு, எமது ஆசிரியர் சங்கம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்தச் சம்பவத்துக்கு அரசு முழுமையான பொறுப்பை ஏற்க வேண்டும்.

"நீர் வழிப் பயணங்களை மாணவர்கள் மேற்கொள்ளும் பொது, இந்தப் பாதையை சரியான முறையில் சீர் செய்து கொடுத்திருப்பின், அந்த மாணவர்கள் பாதுக்காப்பான முறையில் பயணத்தை மேற்கொண்டிருக்கலாம்.

"கிழக்கு மாகாண ஆளுநர் இந்த சம்பவத்துக்கு நீதியான விசாரணையொன்றை நடத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு




வழங்க முன்வர வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம்.

"மட்டக்களப்பிலும் பல பிரதேசங்களில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இவ்வாறான பயணத்தினூடாவே பாடசாலைகளுக்குச் செல்லுகின்றனர். "எனவே, நிலைபேறான அபிவிருத்தி விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்து ஆசிரியர்கள், மாணவர்களுக்குரிய முழுப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்" என்றார்.

படகு விபத்தில்

## மரணித்தவர்களுக்காக விசேட பிரார்த்தனை

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் மரணித்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான விசேட துஆப் பிரார்த்தனை, முள்ளிப்பொத்தானை பாத்திமா பாலிகா மகா வித்தியாலய வளாகத்தில், அதிபர் எஸ்.ஏ.றம்ஸியின் தலைமையில், நேற்று (24) நடைபெற்றது.



இதில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு, மரணித்தவர்களுக்காக துஆப் பிரார்த்தனை செய்தார்கள்.

வல்வெட்டித்துறை நகர தவிசாளர்

# கைவிரிப்பு

## மாவீரர் தின நிகழ்வை நடத்த திடலை வழங்க முடியாது என்றார்

■ எம்.றொசாந்த்

வல்வெட்டித்துறை தீருவில் திடலில், மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் ச. செல்வேந்திரா தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை தீருவில் திடலை, மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு வழங்க வேண்டாம் என வல்வெட்டித்துறை பொலிஸார் கோரியதால், அங்கு மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என்றார்.

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் , மாவீரர் நாளான எதிர்வரும் 27ஆம் திகதி, தீருவில் மைதானத்தில், நிகழ்வுகளை முன்னெடுக்க நகர சபையிடம் அனுமதி கோரியிருந்தார்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் ச. செல்வேந்திர், சிவாஜிலிங்கத்துக்கு எழுத்து மூலமாக பதிலளித்த போதே அவர் மேறகண்டவாறு கூறியுள்ளார்.

அதாவது, இம்மாத இறுதி வரை தீருவில் மைதானத்தில் எந்த நிகழ்வுகளையும் நடாத்துவதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என வல்வெட்டித்துறை பொலிஸாரினால் எனக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதனால் தங்கள் கோரிக்கை தொடர்பில் சாதகமாக பரிசீலிக்க முடியாது என்பதனை தெரிவித்து கொள்வதாக, எழுத்து மூலம் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

மந்துவிலில்

## பெருமளவான வெடிபொருள்கள் மீடகப்பட்டன

■ எம்.றொசாந்த்





யாழ்ப்பாணத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பு வெடிபொருள்கள் உள்ளிட்ட பெருமளவான வெடி பொருள்கள், நேற்று முன்தினம் (23) மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி, மந்துவில் வடக்கு, ஜே/346 கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில், அவர்களால் பராமரிக்கப்பட்டு வந்த தென்னந்தோப்புக்குள் இருந்தே, இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காணிக்குள் விடுதலைப் புலிகளின் தயாரிப்பு வெடிபொருள்கள் உட்பட பெருமளவான வெடிபொருள்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக, இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், இராணுவத்தினர் அப்பகுதியை முற்றுகையிட்டு தேடுதல் நடத்திய போதே , நிலத்தில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் குறித்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன் போது, புலிகளின் தயாரிப்பான டாங்கி எதிர்ப்பு நிலக்கண்ணி வெடிகள், அம்மான் - 3, 23 மிதிவெடிகள், 3 கிளைமோர் குண்டுகள், ரி-56 ரக துப்பாக்கி மகஸின்கள், துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட பெருமளவான வெடிபொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.



## சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கை: மூவர் கைது

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு - கொக்குளாய் கடற்பகுதியில், நேற்று முன்தினம் (23), சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட இருவர் மற்றும் அதே பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் தயாரித்த ஒருவர் என மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது, மீனவப் படகு ஒன்றும், கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

புல்மோட்டை பகுதியைச் சேர்ந்த இரு மீனவர்களே,இவ்வாறு கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அத்துடன், வெடிமருந்து பயன்படுத்தி பிடிக்கப்பட்ட மீன்கள் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் எடுக்கப்பட்டு, ஆய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டு உள்ளதுடன்,

இவர்கள் மீதான சட்ட நடவடிக்கையை

**"கைதுசெய்யப்பட்ட நபரையும் சான்று பொருள்களையும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில், கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்**

முன்னெடுக்கும் நடவடிக்கையில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை, கொக்குளாய் பகுதியில், சட்டவிரோதமான முறையில் மதுபான தயாரிப்பு இடம் ஒன்று சிறப்பு அதிரடிப்படையினரால் முற்றுகையிட ப்பட்டுள்ளதுடன், கொக்குளாய் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டடார்.

இதன்போது, சட்டவிரோத மதுபானம் தயாரிப்புக்கு பயன்படுத்தப்பட்ட பொருள்களும் 256 லீற்றர் கசிப்பும் 360 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட நபரையும் சான்று பொருள்களையும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில், கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

மூன்று ஆண்டுகளில்

## 6,500 குருதி சுத்திகரிப்புகள்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் குருதி சுத்திகரிப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 6,500 தடைவைகள் குருதி சுத்திகரிப்புச் செய்துள்ளதாக வைத்தியசாலையின் அத்தியட்சகர் டொக்டர் எம். எஸ்.ஜாபீர் தெரிவித்தார்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் குருதி சுத்திகரிப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, மூன்றாண்டுகள் நிறைவடைவதையொட்டிய வைபவம், வைத்தியசாலையில், நேற்று (24) நடைபெற்றது.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் குருதி சுத்திகரிப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு மூன்றாண்டுகளில் 150 சிறுநீரக நோயாளர்களுக்கு 6,500 தடைவைகள் குருதி சுத்திகரிப்புச் செய்துள்ளதுடன், 2,500 தடைவைகள் ஊசி மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன.

களுவாஞ்சிகுடி, காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை மற்றும் ஆரையம்பதி போன்ற பிரதேசங்களிலிருந்து சிறுநீரக நோயாளர்கள் குருதி சுத்திகரிப்புக்காக இங்கு வருகை தருவதாகவும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் தெரிவித்தார்.



## சுகாதாரத் துறையினர் பணிப் பகிஷ்கரிப்பு

### மருந்து விநியோகமும் ஸ்தம்பிதம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

சுகாதாரத் துறையினரின் பணிப் பகிஷ்கரிப்புக் காரணமாக வைத்தியசாலைகளில் மருந்து விநியோகப் பகுதியும் நேற்றைய (24) மூடப்பட்டிருந்தது.

மருத்துவ ஆய்வுகூட உத்தியோகத்தர்கள், மருந்து விநியோகிப்பவர்கள், மருந்தாளர்கள், எக்ஸேர படப்பிடிப்பாளர்கள், தாதியர்கள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து, இப்பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் பணிப் பகிஷ்கரிப்புக் காரணமாக, காத்தான்குடி ஆதார வைத்தியசாலையிலும் "மருந்து விநியோகம் இன்று (நேற்று) இடம்பெறமாட்டாது" என எழுதப்பட்ட பதாதையுடன், மருந்தகமும் மூடப்பட்டிருந்தது.

எனினும், வைத்தியசாலையின் ஏனைய சேவைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



இரு மாதங்களாகியும்

## கடலுக்கு சென்றவர்கள் கரை திரும்பவில்லை

■ எம்.எம்.அஹமட் அனாம்

வாழைச்சேனையில் இருந்து செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி ஆழ் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் நால்வர், இரு மாதங்களாகியும் இதுவரை கரை திரும்பவில்லை என்றும், அவர்களை மீட்டுத் தருமாறும் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

ஓட்டமாவடி, பாலைநகர் கிராமத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, மீனவர்களின் உ கடல் பாதுகாப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட எமது உறவினர்கள் அங்கிருந்து படகுடன் எங்கு கொண்டு செல்லப்பட்டனர். இது தொடர்பில் மீனவர்கள் உள்ளனர் என்றும், பிறகு மீனவர்களின் தகவல் கிடைக்கவில்லை



என்றும் அரசாங்கம் எங்களை ஏமாற்றுகின்றதா? அல்லது கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பில் கரிசனை கொள்ளாமல் உள்ளாரா? என்று பாதிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

இந்நிலையில், மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடலில் இருந்து வலையை இழுக்கும் போது படகு கவிழ்ததையடுத்து, அவர் கடலில் வீழ்ந்து காணாமல் போயுள்ளார்.

### மீனவர் இன்றி கரையேறிய படகு

■ வா.கிருஸ்ணா, கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, முகத்துவாரம் கடல் பகுதியில் படகில் நேற்று முன்தினம் (23) இரவு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவர், படகு கவிழ்ந்ததில் கடலில் வீழந்து காணாமல் போயுள்ளார்.

எனினும், செட்டிபாளையம் கடற்கரையில் படகு மாத்திரம் நேற்று (24) காலை கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, திரைய்மடு, சுவீஸ் கிராமத்தைச் சேர்ந்த 50 வயதுடைய சுந்தரராஜா சுரேஸ் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த மீனவர் சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இயந்திர படகில் தனியாக முகத்துவாரம் கடலில் மீன்பிடிப்பதற்குச் சென்றுள்ளார்.

பணத்துக்காக

## கூலிப் படையாக செயற்பட்டவர்கள் கைது

■ செந்தூரன் பிரதீபன்

உடுவில் - அம்பலவாணர் வீதிப் பகுதியில், கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற பெற்றோல் குண்டுவீச்சு தாக்குதல் தொடர்பில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட புலனாய்வுத்துறையினர் கைது செய்து, தம்மிடம் ஒப்படைத்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் இருந்து வாள் ஒன்றும் தாக்குதலுக்கு பயன்படுத்த வந்ததாகக் கூறப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், மானிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

உடுவில் , அம்பலவாணர் வீதியில், கடந்த 19ஆம் திகதி பெற்றோல் குண்டுவீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டு இருந்தன.

காணிப் பிரச்சினை ஒன்றுக்காக, அயல் வீட்டுக்காரர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவமே, இவ்வாறு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் வரைக்கும் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குளிக்கச் சென்ற

## வயது சிறுவன் நீரில் மூழ்கி பலி

■ க. அகரன்

வவுனியா, பாவற்குளத்துக்கு, தாயுடன் நீராடச் சென்ற 4 வயது சிறுவன் நீரில் மூழ்கி நேற்று முன்தினம் (23) மாலை உயிரிழந்துள்ளார்.

வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியைச் சேர்ந்த அம்ஜத் என்ற 4 வயது சிறுவனே, இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

வவுனியா - சூடுவெந்தபுலவு பகுதியில் வசித்து வரும் தாய் ஒருவர், தனது பிள்ளைகளுடன் பாவற்குளம் குளத்துக்கு நீராடச் சென்றுள்ளார்.

இதன்போது 4 வயது சிறுவனை குளத்தில் நீராட விட்டு, தாய் கரைக்கு வந்துள்ளார். மீண்டும் திரும்பிச் சென்று பார்த்த போது, குளத்தில் நீராடிக் கொண்டிருந்த சிறுவனை காணவில்லை. அதன்பின்னர் அச்சிறுவன் சடலமாகவே மீட்கப்பட்டுள்ளார்.




# உணம்புவையில் ஆணின் சடலம் மீட்பு

■ நவி

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உணம்புவ பகுதியிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று (24) காலை மீட்கப்பட்டுள்ளது.

கம்பளை நகரிலிருந்து கல்வெல பகுதிக்கு செல்லும் வழியிலுள்ள கட்டடமொன்றுக்கு அருகிலிருந்தே, சுமார் 34 வயது மதிக்கத்தக்க நபரின் சடலம் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இவர், நேற்று முன்தினம்(24) இரவு மரணமடைந்திருக்கலாம் என சந்தேகிக்கும் கம்பளை பொலிஸார், இவர் கொலை செய்யப்பட்டுள்ளாரா? என்பது தொடர்பிலான விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

ஹட்டன்– டிக்கோயா நகரசபையில்

# சேவல் கூவியது

**அழகமுத்து நந்தகுமார் எதிர்த்தார்**

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் அடுத்தாண்டுக்கான பட்ஜெட் 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற சபை அமர்வில் பட்ஜெட் சபையில் முன்வைக்கப்பட்டது.

இதன்போது பட்ஜெட்டுக்கு ஆதரவாக 12 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் கிடைத்த நிலையில், 11 மேலதிக வாக்குகளால் 2022ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நிறைவேற்றப்பட்டது.

சேவல் சின்னத்தைக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினால் நிர்வகிக்கப்படும் ஹட்டன்- டிக்கோயா நகரசபையின் பட்ஜெட்டுக்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும் நகர சபையின் உப தவிசாளர் உள்ளிட்ட அக்கட்சியின் நான்கு உறுப்பினர்கள் மற்றும் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் இருவரும் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்ததுடன், நகர சபை உறுப்பினரான அழகமுத்து நந்தகுமார் மாத்திரம் இந்த பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உதிரிப்பாகங்களை திருடிய மூவர் சிக்கினர்

■ எம். செல்வராஜா

வாகனங்களின் பெற்றறிகள் மற்றும் உதிரிப்பாகங்களை நீண்டகாலமாக இருந்தே திருடி வந்த மூவர், ஹப்புத்தளை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கைதுசெய்யப்பட்டனர்.

ஹப்புத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாகர தயாரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே, குறித்த மூவரும் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து உதிரிப்பாகங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

நகர் மற்றும் புற நகர்ப் பகுதிகளில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களை இலக்கு வைத்தே, மேற்படி திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளதுடன், நீண்டகாலமாகவே இத்திருட்டுக்கள் இடம்பெற்று வந்துள்ளமையும், கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர், பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜர்படுத்தப்படுவர் என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாகர தயாரட்ன கூறினார்.

தொழிற்சங்க நடவடிக்கையால்

# நோயாளர்கள் அவதி



■ சுதத்.எச்.எம்.ஹேவா

சில அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, 15 சுகாதார தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கையால் டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலைக்கு வருகைத் தந்த நோயாளர்கள் பாரிய அசௌகரியத்துக்கு முகம் கொடுத்தனர்.

அத்துடன் குறித்த தொழிற்சங்க நடவடிக்கையால் கிளங்கன் வைத்தியசாலை, கொட்டகலை, வட்டவளை, கினிகத்தேனை, மஸ்கெலியா, பொகவந்தலாவை ஆகிய பிரதேச வைத்தியசாலைகளிலும் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதால், நோயாளர்களும் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்குச் சென்றவர்களும் பாதிக்கப்பட்டனர்.

எனினும் ,மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவு எவ்வித தடையுமின்றி செயற்படுவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

நுவரெலியா– மஹரகம

# பஸ் இடைநிறுத்தம்

**பயணிகள் மட்டுமன்றி நோயாளர்களே பெரும் அவதி**

■ ரஞ்சித் ராஜபக்ஸ

மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்து சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நுவரெலியாவிலிருந்து மஹரகம அபெக்ஷா வைத்தியசாலை வரையில் பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த பஸ், கடந்த 2 வருடங்களாக சேவையில் ஈடுபட்டுவந்தது. மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டள்ள நிலையில், இந்த இ.போ.ச பஸ் சேவை இதுவரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை என, பயணிகள் குற்றஞ்சுமத்துகின்றனர்.




தினமும் அதிகாலை 3.20 மணிக்கு நுவரெலியா பஸ் டிப்பாவுக்குச் சொந்தமான பஸ்ஸானது, நுவரெலியா பஸ் தரப்பிடத்தில் பயணத்தை ஆரம்பித்து காலை 8.30 மணிக்கு மஹரகம அபெக்ஸா வைத்தியசாலையை சென்றடையும். மீண்டும் 1 மணிக்கு நுவரெலியா நோக்கி பயணத்தை ஆரம்பிக்கும்.

அத்துடன், நுவரெலியா, இராகலை, கந்தப்பளை, நானுஓயா, தலவாக்கலை, கொத்மலை, பூண்டுலோயா, அக்கரப்பத்தனை,டயகம, உடபுஸ்ஸலாவ ஆகிய பிரதேசங்களிலிருந்து, மஹரகம அபெக்ஷா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகவும் கிளினிக் நடவடிக்கைக்காகவும் தினமும் அதிகளவானோர் சென்றுவருவர்.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு மேலதிகமாக கம்பளை, பேராதனை உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் இந்த பஸ்ஸை இரண்டு வருடங்களாகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

மேலும் இந்த பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட போது, குறித்த பஸ்ஸில் ஏ.சி வசதி, நீர் வசதி உள்ளிட்டவைகளுடன், பஸ்ஸில் பயணிக்கும் நோயாளர்களின் உள நலனுக்கான ஸ்டிக்கர்கள் உள்ளிட்ட பஸ்ஸின் நவீனமயப்படுத்தலுக்காக நுவரெலியா நகர மக்களால் இரண்டு இலட்ச ரூபாய் நுவரெலியா பஸ் டிப்போவுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இந்த நிலையில், குறித்த பஸ்ஸின் சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதால் அபெக்ஷா வைத்தியசாலைக்கு, சிகிச்சை மற்றும் கிளினிக்காக வரும் நோயாளர்கள் ஒட்டோ மற்றும் வான்களுக்கு 12,000 - 20,000 ரூபாய் வரை செலவு செய்ய நேரிட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா பஸ் டிப்போவின் முகாமையாளரிடம் வினவியபோது, தமது டிப்போவிலுள்ள பஸ்களுக்கான பெற்றறிகள் மற்றும் டயர்கள் உள்ளிட்ட வாகன உதிரிப்பாகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் குறித்த பஸ் சேவையை இடைநிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# குருதிக்கொடை ...



அக்குறணை பிரதேச சபை பிரதேச செயலகம் மற்றும் கஸாவத்தை விவசாயிகள் சங்கம் என்பன இணைந்து நடாத்திய, இரத்ததான முகாம் 23 ஆம் திகதி அக்குறணை பிரதேச செயலக வளாகத்தில் இடம் பெற்றது. ( மொஹொமட் ஆஸிக்)

# கல்ஹுல்ல பகிஸ்கரிப்பு தொடர்கிறது

■ ராமு தனராஜா

13 கோரிக்கைகளை முன்வைத்து, மடுல்சீமை தோட்ட தொழிலாளர்களால் நேற்று முன்தினம் (23) ஆரம்பிக்கப்பட்ட பணிபகிஸ்கரிப்பு இரண்டாவது நாளாகவும் நேற்றும் (24) தொடர்ந்தது.

இந்த நிலையில், நேற்றைய தினம் (24) விராளிப்பத்தன தோட்ட தலைமை அதிகாரி மடுல்சீமை பொலிஸ் தலைமை அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்துற்கு வருகை தந்து, போராட்டத்தில் ஈடுப்பட்ட தொழிலாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். இக்கலந்துரையாடலில் சுமுகமான தீர்வு கிடைக்காத்தால், தொழிலாளர்கள் நேற்றைய தினமும் (24) பணிபகிஸ்கரிப்பை முன்னெடுத்தனர்.



கிண்ணியா சம்பவத்துக்கு

# இராமேஸ்வரன் எம்.பி இரங்கல்

■ பி.கேதீஸ்

கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் படகுப் பாதை கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில், மாணவர்கள் உள்ளிட்ட பலர் உயிரிழந்துள்ள சம்பவம் கடும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது எனவும், இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி இராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (23) இடம்பெற்ற இந்த விபத்தானது, எம் மனங்களில் நீங்காத இடம்பிடித்துள்ள ஒரு கோர சம்பவமாக அமையகின்றது . அத்துடன் பல கனவுகளை சுமந்த வண்ணம் பள்ளிக்குச் சென்ற அந்த பிஞ்சு குழந்தைகள் மற்றும் பொருளாதார நலனை நோக்கி சென்ற குடும்ப உறவுகள் அனைவரும் இந்த கோர விபத்தில் காலனின் பிடியில் சிக்கிக் கொண்டதை எண்ணும்போது மனது சொல்லென்னா துன்பத்தில் துடிக்கின்றது.

இந்த கோர விபத்தில் உயிர் நீத்த எம் சொந்தங்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை பகிர்ந்து கொள்கின்றேன். .இவ்விபத்தில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிராத்திக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# இலக்கம் மட்டும் இருந்தால் நகல் சான்றிதழ் பெறலாம்

■ சேஹ்ரன் செனவிரத்ன

விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யாமல்,, உரிய சான்றிதழ்களின் இலக்கத்தை மாத்திரம் சமர்ப்பித்து, பயனாளிகள் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும் விசேட வேலைத்திட்டம் ஒன்று, கண்டி மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், பயனாளிகள் உரிய கட்டணங்களை செலுத்தி, குறித்த சான்றிதழ் இலக்கத்தை மாத்திரம் கூறி நகல் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன்மூலம் கண்டி மாவட்டத்தில் வசிப்பவர்கள் தமது மொழிகளைப் பயன்படுத்தும் போது ஏற்படும் சிக்கல்களை தவிர்த்து, விரைவில் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அதி நவீன மென்பொருள் கணினி கட்டமைப்பு நேற்று (24) பிரதேச செயலகங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இதற்கான 9 மில்லியன் ரூபாய் நிதியுதவி, சர்வதேச வளர்ச்சிக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனம் ( USAID ) வழங்கியுள்ளது.

மாத்தளையில் கொரோனா மீண்டும் தாண்டவம்

# ஒரே நாளில் 102 தொற்றாளர்கள் அடையாளம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் 102 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மாத்தளை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கயானது அண்மைகாலங்களில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களுள் அதிகம் என்றும் எனவே, சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது அவசியம் என பொதுமக்களிடம் பணிப்பாளர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் மாத்தளை மாவட்டத்தில் நாவுல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதிகளிலேயே அதிகளவு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மாத்தளை மாவட்டத்தில் இதுவரை 372 குடும்பங்களைச் சேர்ந்த 970 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் மாத்தளை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாண புதிய செயலாளர்

# கடமைகளைப் பொறுப்பேற்றார்



■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாண புதிய பிரதான செயலாளராக சுனில் ஜயலத் நேற்று முன்தினம் (23) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ முன்னிலையில் தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சுனில் ஜயலத், 1984ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி பட்டம் பெற்றுள்ளதோடு, அதன் பின்பு பல வருட காலம் அவர் ஆசிரியர் துறையில் சேவையாற்றியுள்ளார்.

1987ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட சுனில் ஜயலத் மஹவிலச்சிய, கஹட்டகஸ்தெனிய, மிஹிந்தலை, ரம்புக்கன ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உதவி செயலாளராகவும் மற்றும் பிரதேச செயலாளராகவும் சேவையாற்றியுள்ளதுடன், சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும், கம்பஹா பிரதேச செயலாளராகவும் கம்பஹா மாவட்ட மேலதிக செயலாளராகவும் மற்றும் கம்பஹா மாவட்ட செயலாளராகவும் கமையாற்றியுள்ளார்.சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளராக நியமனம் பெறுவதற்கு முன்பு அவர் இறுதியாக கம்பஹா மாவட்ட செயலாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# தெரியவில்லையெனின் தெரியாதவர்களிடம் கேட்காதீர்கள்!

நம்மைச்சுற்றி என்ன நடக்கிறது, யார் யாரெல்லாம் நமக்குப் பின்னால் இருக்கின்றனர் என்பது தொடர்பில், ஒவ்வொருவரும் விழிப்பாக இருக்கவேண்டும். வளர்ச்சியடைந்துவரும் நவீன தொழில்நுட்ப காலத்தில், சகலவையும் ஒரு சில நேரத்துக்குள் கைகளுக்குக் கிடைத்துவிடுகின்றன.

நவீன திறன்பேசி ஒன்றிருந்தால், தேவையான பயன்பாட்டுத் தளங்களை (அப்ஸ்) அதில் தரவிறக்கம் செய்து வைத்திருந்தால், நான்கு சுவர்களுக்குள் இருந்துகொண்டே வேலைகளை இலகுவாக முடித்துக் கொள்ள முடியும்.

எமது நாட்டிலும் திரவப் பணத்தைப் பயன்படுத்தல் குறைந்துகொண்டே வருகிறது. அதிலொரு நடவடிக்கையாகவே அதிவேக நெடுஞ்சாலைகளின் நுழைவாயில்கள் LANKAQR முறைமையின் ஊடாக இலத்திரனியல் மயப்படுத்தப்படவுள்ளன. இதனூடாக, 8-10 செக்கன்களில் குறித்த கட்டணத்தைச் செலுத்துவதற்கு, அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் சாரதிகளுக்கு இயலுமை கிட்டும். அதற்கு அமைச்சரவையும் அங்கிகாரம் வழங்கியுள்ளது.

ஆனால், பெரும்பாலான நகரங்களைப் பார்க்குமிடத்து, பணப் பயன்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. கொரோனா வைரஸ் தொற்றின்போது, நாடே முடக்கப்பட்டிருந்தமையால், 'நிகழ்நிலை' ஊடாக கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. சரியான சமிக்ஞை கிடைக்காமையால் மாணவர்கள் பலரும், மரங்கள், உயரமான தண்ணீர் தாங்கிகள் ஏன்? மலைகளின் மீதிருக்கும் கற்பாறைகளின் மீதேறி கல்வி பயின்றனர்.

இதேபோன்றுதான், சில நகரங்களில் இருக்கும் வங்கிகளில் தன்னியக்க இயந்திர வசதிகள் குறைவு, இலத்திரனியல் பற்று அட்டையை பயன்படுத்த தெரியாதவர்களிடத்தில் பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறானவர்களுக்கு, தன்னியக்க இயந்திரம் இருக்குமிடத்தில் நிற்பவர்களே தெய்வம். ஏமாற்றுவதற்கு ஏற்கெனவே தயாராகி வந்து நின்றிருக்கும் நபர்களிடத்தில், இலத்திரனியல் அட்டைகளைக் கொடுத்து பலரும் ஏமாந்து போய்விடுகின்றனர். அட்டையின் இரகசியக் குறியீட்டு இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் நபர்கள், வழங்கியவரின் பற்று அட்டையைப் பெற்று, இயந்திரத்தில் செருகி மிகுதியைப் பார்த்துவிட்டு, “அதில் பணம் இல்லை” என பதிலளித்துவிட்டு, போலியான பற்று அட்டையை வழங்கிவிட்டு தலைமறைவாகி விடுகின்றனர்.

பெருந்தொகையில் பணம் வைத்திருந்தால், இரண்டொரு நாட்களில் அப்பணத்தை இழந்து விடுகின்றனர். ஆகையால், தன்னியக்க இயந்திரங்களில் தங்களுக்குப் பணத்தை மீளப்பெற தெரியவில்லையெனில், அருகிலேயே நிற்கும் தெரியாதவர்களிடம் கொடுக்காதீர்கள். இரகசிய குறியீட்டு இலக்கத்தை மனப்பாடம் செய்து வைத்துகொள்வதே நல்லது. பற்று அட்டையுடன் சேர்த்தே வைத்திருக்கவேண்டாம்.

பற்று அட்டையைப் பயன்படுத்த தெரியாதவர்கள், முடிந்தளவு கிழமை நாட்களில் வங்கிக்குச் செல்லுங்கள், தங்களுக்குத் தெரியாவிடின், வங்கி ஊழியர்கள் உதவுவார்கள், விடுமுறை நாட்களில் சென்றுவிட்டால், தெரியாதவர்களிடம் உதவிக்கேட்டு, இருப்பதையும் இழக்க வேண்டிய நிலைமையே ஏற்படும்.

திரவப் பணத்தைப் பயன்படுத்தல் மோசடிகளைத் தவிர்க்கும். ஆனால், தெரியாதவர்களுக்கும் முறையாகச் சொல்லிக்கொடுப்பதற்கு வழிசமைக்கவேண்டும். அத்துடன், வழிமுறைகளை ஒலி வடிவில் கிடைப்பதற்கு வழிசமைக்கலாம். இதனூடாக, வாசிக்கத் தெரியாதவர்களுக்கும் அது பிரயோசனமானதாய் இருக்கும். இவற்றில் எதுவுமே புரியவில்லையென்றாலும் தெரியாதவர்களிடம் கேட்காமல் இருப்பதே, இக்காலத்தில் புத்திசாலித்தனம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

அழுபவர்கள் தொடர்ந்து அழுதுகொண்டே இருக்க முடியாது. மாந்தர்களுக்கு எண்ணற்ற கடமைகள் உண்டு. நித்தம் சோககீதம் பாடுவதால், நெஞ்சம் விரக்கதியாகி விடும்.

தோல்வியை நிரந்தரமானது எனச் சிலர் எண்ணலாம். உலகம் நன்கு இயங்க, மக்களின் கரங்கள் ஓயக்கூடாது. நேற்று, இன்று, நாளை என மூன்று பொழுதுகளிலும் ஓய்வின்றி உழைத்தவர்களுக்கு, சோர்வும் இல்லை; சோகமும் இல்லை.

காரியமாற்றுபவர்களுக்கு காலம் போதாது. பொழுதுபோக்கு ஓர் அம்சம். இதுவும் தேவையானது; நெஞ்சத்தைச் சீராக்குகின்றது. பகலில் பலமணி நேரம் உறங்கிக் களிப்பவர்கள், அது தங்கள் தேக ஆரோக்கியத்துக்கு உதந்ததல்ல எனப் புரிந்துகொள்வதில்லை.

தொடர்ந்து தொலைக்காட்சிகளைப் பார்த்தபடி இருந்தால், சோர்வுதான் உண்டாகும். பயனுள்ள நூல்களைப் படிக்கலாம். தேகரோக்கியத்தைக் குறைக்காமல், பயனுள்ள காரியங்களைச் செய்க. துன்பங்களைத் தூக்கிப் படிக்க வேண்டாம்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

கனடா குழப்பம்:

# சுமந்திரனுக்கு எதிரான கோசங்கள்



புருஜோத்தமன் தங்கமயில்

“...எங்களுக்கு அரசியல் தீர்வெல்லாம் தேவையில்லை; தமிழீழம் தான் தேவை. இங்கு வந்து அரசியல் தீர்வு பற்றி நீ(!) பேசத் தேவையில்லை. இதை நீ(!) இலங்கைப் பாராளுமன்றத்துக்குள் பேசு...” -இவை, சனிக்கிழமை (20) கனடாவில் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டிருந்த அரசியல் சந்திப்பொன்றில் குழப்பம் விளைவித்தவர்களால் உதிர்க்கப்பட்ட வார்த்தைகள் ஆகும்.

இந்த வார்த்தைகளுக்கு மேலதிகமாக, “நீ! கோட்டாவின் ஆள்; இங்கு இனி வரத்தேவையில்லை...” என்பது ஈறாக, தூசண வசையும் பொழியப்பட்டது.

அமெரிக்கா, கனடா, பிரித்தானியா ஆகிய நாடுகளின் அழைப்பின் பேரில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ. சுமந்திரனும் இரா. சாணக்கியனும் சென்றிருக்கிறார்கள். அந்தப் பயணத்தின் ஒரு பகுதியாகவே, கூட்டமைப்பின் கனடா கிளை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்கள். அந்த நிகழ்வுக்குள் புகுந்தவர்களாலேயே மேற்கண்ட கோசங்களும் தூசண ‘ஆராதனை’களும் செய்யப்பட்டன.

புலம்பெயர் தேசங்களில் சுமந்திரன் கலந்து கொள்ளும் நிகழ்வுகளுக்கு எதிராக, ஆர்ப்பாட்டங்களும் நிகழ்வுகளுக்குள் புகுந்து குழப்பம் விளைவிக்கும் செயற்பாடுகளும் அடிக்கடி நிகழ்வதுண்டு.

அவுஸ்திரேலியா, பிரித்தானியா போன்ற நாடுகளில் இவ்வாறான குழப்பங்கள் ஏற்கெனவே திட்டமிட்ட வகையில் நிகழ்த்தப்பட்டு இருக்கின்றன. அதன் தொடர்ச்சியாகவே, கனடாவில் இடம்பெற்ற குழப்பங்களையும் நோக்க வேண்டும்.

தாயகத்தில் எந்தவொரு தருணத்திலும் அமைதியான சூழல் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான், குழப்பம் விளைவிப்பவர்களின் அடிப்படை நோக்கம். தங்களின் நோக்கத்துக்கு யார் யாரெல்லாம் குந்தகமாக இருக்கிறார்களோ, அவர்களை எல்லாம் தமிழினத் துரோகிகளாக அடையாளப்படுத்தி, அவர்களை அரங்கில் இருந்து அகற்றுவதற்கான அனைத்து வகையான தகிடு தித்தங்களையும் கடந்த காலங்களில் அரங்கேற்றி வந்திருக்கிறார்கள்.

அவர்களுக்குத் தாயகத்திலுள்ள மக்கள் குறித்தோ, அவர்களின் எதிர்கால வாழ்வு குறித்தோ, எந்தவித சிந்தனையும் கிடையாது. மாறாக, தங்களின் தனிப்பட்ட நிகழ்சி நிரல்களை, தமிழீழம் எனும் அடையாளத்துக்குள் மறைந்து நின்று நிறைவேற்ற நினைக்கிறார்கள்.

தனித் தமிழீழம் எனும் கனவு, முள்ளிவாய்க்காலோடு முடிந்து போய்விட்டது. தாயகத்திலுள்ள எந்தவொரு தமிழ் அரசியல் தலைவரும், தமிழீழக் கோரிக்கையோடு அரங்கில் இல்லை. இரா. சம்பந்தன் தொடங்கி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஈறாக சி.வி. விக்னேஸ்வரன் வரை, யாரும் தமிழீழம் பற்றி வாயே திறப்பதில்லை. ஏனெனில் அதற்கான சூழல் தற்போதைக்கு இல்லை.

அப்படிப்பட்ட நிலையில், “அரசியல் தீர்வு தேவையில்லை; தமிழீழம்தான் வேண்டும்” என்று கோசம் எழுப்பும் புலம்பெயர் தேசத்து துருவக் குழுக்களுக்கு முன்னால், தாயகத்திலுள்ள அனைத்து அரசியல்வாதிகளும் அவர்களைத் தங்களது பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்துக்கு வாக்களித்து அனுப்பும் மக்களும் துரோகிகளாகவே தெரிவர்.

தமிழ்த் தேசிய அரசியல் யாருக்கானது என்கிற அடிப்படைப் புரிதல், தமிழ்த் தேசியம் பேசும் தரப்புகள் பலவற்றுக்கு இருப்பதில்லை. அதிலும் குறிப்பாக, புலம்பெயர் தேசத்தில் குழப்பம் விளைவிக்கும் இவ்வாறான துருவக் குழுக்களுக்கு கிஞ்சித்தும் இருப்பதில்லை.

இந்தக் குழுக்களில், கடந்த காலத்தில் ஆயுதப் போராட்டத்துக்காக சேர்க்கப்பட்ட பொருந்தொகைப் பணத்தைச் சுருட்டியவர்களும் அவர்களின் ஏவலாளிகளுமே அதிகம் இருக்கிறார்கள். இஅவர்களின் பசப்பு வார்தைகளுக்கு மயங்கி, அதீத உணர்ச்சிவசப்படும் சிலரும் கூடச் சேர்ந்து கொள்கிறார்கள். இவர்கள், தாயகத்திலுள்ள மக்களின் மனங்களை மாத்திரமல்ல, புலம்பெயர் தேசத்திலுள்ள மக்களின் மனங்களையும் புரிந்து கொண்டவர்கள் இல்லை.

தங்களின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காக, தமிழ்த் தேசிய அடையாளத்தையும் புலம்பெயர் தமிழ் மக்களின் அடையாளத்தையும், கபளீகரம் செய்து கொள்கின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னரான 12 ஆண்டுகால வாழ்க்கையை, தாயகத்திலுள்ள மக்கள் கடந்து வந்திருக்கிறார்கள். இந்தக் காலப்பகுதி, மக்களுக்கு அதீத புரிதல்களை வழங்கியிருக்கின்றது. அரசியல் ரீதியாக, இலக்குகளை நோக்கி எவ்வாறு நகர வேண்டும்? அதற்கு எவ்வாறான நடைமுறை தற்போதுள்ள சூழலில் பொருத்தமானது என்பது குறித்த புரிதல்கள் அவர்களுக்குத் தெரியும்.

இன்றைக்கு யாராவது வந்து, “தமிழீழம்தான் ஒற்றைத் தீர்வு; அதற்காகப் போராட வேண்டும்” என்று கோரினால், அதைக் காது கொடுத்துக் கேட்கக்கூட மக்கள் இருக்கமாட்டார்கள். தேசியத் தலைவர் பிரபாகரனாலும் அவரோடு அணி வகுத்த பல்லாயிரக்கணக்கான உறவுகளாலும் பெற்றுக்கொடுக்க முடியாத தமிழீழத்தை, எந்தவொரு கொம்பனாலும் தற்போது பெற்றுக் கொடுக்க முடியாது என்பது மக்களுக்கு தெரியும்.

ஏனெனில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழத்துக்கான அர்ப்பணிப்புக்கு முன்னால், எந்தவொரு தரப்பும் நிற்கவே முடியாது. அப்படியான நிலையில், புலம்பெயர் தேசத்து துருவக் குழுக்களின் ‘பேத்தல் பேச்சு’க்களை, மக்கள் கண்டு கொள்வார்கள் என்பது வெறும் மடைத்தனம். இன்றைக்கு, தமிழீழம்தான் தீர்வு என்று பேசும் தரப்புகள், தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் ஊடக கவனத்துக்காகவே பேசுகின்றன.

சுமந்திரனுக்கு எதிராக, கனடா சந்திப்பில் குழப்பம் விளைவித்தவர்களை, சமூக ஊடகங்களில் சிலர் ஆரம்பத்தில் வெகுவாக வரவேற்று எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்களில், புலம்பெயர் தேசத்து அறிவார்த்த தரப்புகள் என்று தங்களை அடையாளப்படுத்தியவர்களும் தாயகத்தில் தங்களை கல்வியாளர்களாக கடந்த காலத்தில் முன்னிறுத்திய ஒரு சிலரும் அடக்கம்.

ஆனால், சுமந்திரனுக்கு எதிரான குழப்பம் தாயகத்திலோ, புலம்பெயர் தேசத்திலோ மக்களால் இரசிக்கப்படவில்லை என்பது சில மணித்தியாலங்களுக்குள் தெரிந்ததும், அவர்கள் பதுங்கிக் கொண்டுவிட்டார்கள். குழப்பம் விளைவித்தவர்களைக் கொண்டாடியவர்களில் அநேகருக்கு, சுமந்திரன் என்கிற அரசியல்வாதி, தனி மனிதன் மீதான காழ்ப்புணர்வே காரணமாக இருந்திருக்கின்றது.

மாறாக, அவர்களிடத்தில் தமிழீழத்துக்கான அர்ப்பணிப்பு கிடையாது. தங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு, கோபதாபங்களைக் காட்டுவதற்காக, எந்தவொரு கீழ் நிலைக்கும் செல்வதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தான் அது காட்டுகின்றது.

உரிமைகளுக்காகப் போராடும் எந்தவொரு சமூகமும், விமர்சனத்துக்கும் கேள்விகளுக்கும் அப்பால் யாரையும் தலைவர்களாக முன்னிறுத்தக்கூடாது. அது, அந்தச் சமூகத்தைப் படுகுழிக்குள் வீழ்த்திவிடும். உரிமைகளைப் பெற்றுவிட்டாலும், சிலவேளை சர்வாதிகாரத்தின் பிடிக்குள் நிற்கும் சூழலை உருவாக்கிவிடும்.

அதனால்தான், போராடும் எந்தவொரு சமூகமும் தனக்குள் ஜனநாயக நெறிகளைப் பேண வேண்டும் என்கிற விடயம் சொல்லப்பட்டு வருகின்றது. அதுதான், தலைவர்கள் தவறிழைக்கும் போது, கேள்விகளை எழுப்ப வைக்கும்.

அப்படியான நிலையில், தமிழ்த் தேசியத்தின் பேரால், அரசியல் செய்கின்ற யாரும் கேள்விகளுக்கோ, விமர்சனத்துக்கோ அப்பாற்பட்டவர்கள் இல்லை. சுமந்திரனும் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டியவர்தான். அவர், கடந்த காலங்களில் கேள்விகளுக்குத் தொடர்ச்சியாகப் பதிலளித்தும் வந்திருக்கிறார்.

ஆனால், கனடா சந்திப்பில் சுமந்திரன் கேள்விகளுக்கு பதிலளிக்கவில்லை என்று குறிப்பிட்டு, விடயத்தை மடைமாற்ற சிலர் முனைகிறார்கள். அந்தச் சந்திப்பில் சுமந்திரன் உரையாற்றிக் கொண்டிருந்த போதுதான், குழப்பம் விளைவிக்கப்பட்டது.

ஒரு நிகழ்வில் கலந்து கொண்டிருக்கும் பிரதான அழைப்பாளர், தன்னுடைய நிலைப்பாடுகளை முதலில் தெளிவுபடுத்திவிட்டுத்தான், கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதுதான் வழக்கம். அந்த வழக்கத்துக்கு மாறாக, பிரதான அழைப்பாளர் தன்னுடைய கருத்துகளை முன்வைப்பதற்கு முன்னாலேயே, கேள்விகளுக்குப் பதிலளிக்க கோருவது, வேறு நோக்கங்கள் சார்ந்தது.

சுமந்திரனின் கூட்டத்தைக் குழப்ப வேண்டும் என்று நினைத்துவிட்டால், அதற்கு என்ன காரணத்தைச் சொல்லியும் செய்யலாம். அந்தக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்தவர்களால் விடுக்கப்பட்ட, “கூட்டத்தை முடித்து, சுமந்திரனை அனுப்புங்கள்; இல்லையென்றால் விளைவுகள் பெரிதாகும்..” என்ற மிரட்டலும் அதன் பிரதிபலிப்புத்தான்.

அப்படிப்பட்ட நிலையில், கேள்விக்கு அப்பாலானவர் இல்லை சுமந்திரன், ஆகவே, குழப்பம் விளைவித்தவர்கள், நேர்மையான நோக்கம் கொண்டவர்கள் என்று யாராவது நியாயப்படுத்தினால் அது அயோக்கியத்தனமானது.

சுமந்திரன், எந்தவொரு தருணத்திலும் தனித் தமிழீழம் தன்னுடைய அரசியல் இலக்கு என்று சொன்னதில்லை. அதைத் தெரிந்து கொண்டுதான், தாயகத்து மக்கள் அவரைத் தங்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்திருக்கிறார்கள். தன்னுடைய நிலைப்பாடுகளை, சந்திப்பொன்றில் வெளிப்படுத்துவது அவருக்கான உரிமை.

கனடா சந்திப்பில், சுமந்திரன் வெளிப்படுத்திய கருத்துகள், ஏற்கெனவே தாயக மக்களிடம் வெளிப்படுத்தப்பட்டவை. அப்படியிருக்க, குழப்பவாதிகளை யாராவது நியாயப்படுத்த முனைந்தால், அவர்களின் நோக்கமும் வேறு மாதிரியானவை என்றுதான் புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், அவை தாயகத்து தமிழ் மக்கள் சார்ந்தவை இல்லை.

## கடிதங்கள்

### பொலிஸாரை முற்றாக மாற்றுங்கள்

முல்லைத்தீவு, ஐயன்கன்குளம் பொலிஸ் நிலைய பொலிஸார் அனைவரையும் இடம்மாற்றம் வழங்குவதற்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பிரதி பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் கிராமங்களின் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்படி கிராமங்களில் இருந்து, மணல், மரங்கள் போன்றவை தொடர்ச்சியாக வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படும் நிலையில், துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுகொள்ளப்பட்டது.

குறிப்பாக, “கொக்காவில் பகுதிக்கு முன்பாக, பொலிஸ், இராணுவம் இணைந்த காவலரண் வேண்டும்; டிப்பர்களில் கொண்டு செல்லப்படும் மணலைப் பிடிக்க வேண்டும்; மரக் கடத்தல்களைத் தடுக்க வேண்டும்” போன்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வரும் நிலையிலும், ஐயன்கன்குளம் பொலிஸார் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை.

ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் கிராமங்களின் பொது அமைப்புகளான அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், பிரதி பொலிஸ்மா அதிபரை சந்திக்கின்ற போது, இக்கிராமங்களில் நடைபெறுகின்ற சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுப்பதில், பொலிஸார் மந்தகதியாகச் செயற்படுகின்றனர் போன்ற பல்வேறு விடயங்களை தெரியப்படுத்த உள்ளாகவும் ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றுகின்ற அனைத்துப் பொலிஸாருக்கும் இடமாற்றம் வழங்கி, புதியவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரவுள்ளதாகவும் பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன.

நடராசா கிருஸ்ணகுமார்

# அமைச்சரவைத் தீர்மானங்கள்




## 01. புதிய எல்லையை பிரகடனப்படுத்தல்

கல்ஓயா வடகீழ் தாழ்நில சரணாலயம் எனப்படும் அம்பாறை சரணாலயம், 1954 ஆம் ஆண்டு தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் சரணாயலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது 9,323.96 ஹெக்ரயார்களுடன் கூடிய நிலப்பரப்பைக் கொண்டது

பின்னர் கல்ஓயா குடியேற்றத் திட்டத்தின் கீழ் நகர மையமாக நிறுவப்பட்ட அம்பாறை நகரம் தற்போது விரிவாக அபிவிருத்தியடைந்துள்ளது.

ஒருசில அரச காணித்துண்டுகள் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் தனியார் துறையினருக்கு வழங்கி அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பதால் அம்பாறை நகரத்திட்டமிடல் தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளமையை அடையாளங் கண்டுள்ள காணித்துண்டுகளை சரணாலயத்திலிருந்து நீக்கி புதிய எல்லைகளைப் பிரகடனப்படுத்துவதற்காக 2009 மே மாதம் 20 ஆம் திகதி அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

யானைகள் மற்றும் ஏனைய விலங்குகள் நடமாடும் பகுதிகளைத் தொடர்ச்சியாக சரணாலய வலயமாகப் பேணுவதற்கும், அதற்குரிய 46.18 ஹெக்ரயர்கள் சன அடர்த்தியுடன் கூடியதும் அபிவிருத்தி செய்யப்பட்டதுமான பகுதியை சரணாலய வளாகத்திலிருந்து நீக்கி வெளியிடுவதற்கும், புதிய எல்லைகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் அங்கிகாரம் அளித்துள்ளது.

## 02. கட்டணங்களை அறவிடல் டிஜிட்டல் மயப்படுத்தல்

இலங்கையில் திரவப்பணத்தைப் பயன்படுத்தலைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தல் முறையைப் விரிவாக்குவதற்காக அனைத்து அனுமதிபெற்ற நிதி நிறுவனங்களுடன் இணைந்து அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன்மூலம் LANKA QR முறைமையில் ஊடாக இலத்திரனியல் மயப்படுத்தப்படவுள்ளது.

கட்டண முறையை அறிமுகப்படுத்துவதற்கும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. தத்தமது கைத்தொலைபேசியில் குறித்த தொகையைக் குறித்துக்கொண்டு எந்தவொரு வங்கியின் நிகழ்நிலை நடமாடும் கட்டண செயலி மூலம் கட்டணங்களை அறவிடுவதற்கு நுழைவாயிலில் காணப்படும்.8-10 செக்கன்களில் குறித்த கட்டணத்தை செலுத்துவதற்கு, அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் சாரதிகளுக்கு இயலுமை கிட்டும்.

## 03. தரவுத்தொகுதியை இயலளவை அதிகரித்தல்

வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் அதிகரித்துள்ளமையால் நெடுஞ்சாலைகளில், குறிப்பாக கொழும்பு நகரத்தில் காணப்படும் வீதிகளில் மோட்டார் வாகன முகாமைத்துவத்திற்காக பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது.

அதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தற்போது காணப்படுகின்ற தரவுகளை இற்றைப்படுத்துவதற்காக கொரியா சர்வதேச ஒத்தழைப்புக்கள் நிறுவனத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக வேண்டுகோள் ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைகள் அமைச்சு தேசிய ரீதியாக மோட்டார் வாகன போக்குவரத்து தரவுகள் முகாமைத்துவத் திட்டமொன்றை தயாரிப்பதற்கும், மோட்டார் வாகன தரவுகளைத் திரட்டுவதற்கான அடிப்படையொன்றை உருவாக்குவதற்கும், தன்னியக்க மோட்டார் வாகனத் தரவுத்தொகுதிக்கான முகாமைத்துவத் தொகுதியை உருவாக்குவதற்கும், மோட்டார் வாகனப் போக்குவரத்து கேள்விப் பகுப்பாய்வை மேற்கொள்ளும் ஆற்றலை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது அதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 04. பரஸ்பர நிர்வாகம் தொடர்பான ஒப்பந்தம்

இலங்கை- வியட்நாம் அரசாங்கங்களுக்கு இடையில் இடம்பெற்ற இருதரப்பு கலந்துரையாடல் தொடரின் பிரதிபலனாக இரு நாடுகளுக்கும் இடையில் சுங்க நடவடிக்கைகள் தொடர்பான ஒத்துழைப்புக்கள் மற்றும் பரஸ்பர நிர்வாக ஒத்துழைப்புக்களைப் பரிமாறிக் கொள்வதற்காக இலங்கைக்கும் வியட்நாமிற்குமிடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

வர்த்தகக் கொடுக்கல் வாங்கலில் செலவுகளைக் குறைத்தல், தேச எல்லைகள் தொடர்பான வரிகளை சரியான வகையில் கணிப்பீடு செய்தல் மற்றும் திரட்டுதல், மட்டுப்பாடுகளுக்குட்பட்ட பொருள்களை பரிமாற்றுதலை தடை செய்தல், மட்டுப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகளை விதித்தல் போன்றவற்றுக்காக குறித்த முன்மொழியப்பட்டுள்ள வர்த்தக உடன்படிக்கை பங்களிப்புச் செய்யும். அதற்கமைய, இருதரப்பினரால் உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ள முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 05. இயற்கை வாயு கம்பனியொன்றை நிறுவுதல்

2011 தொடக்கம் 2013 வரைக்குமான காலப்பகுதியில் மன்னார் அகழி ஆ2 நிலப்பரப்பின் ஒரு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கமைய, எமது நாட்டில் பெற்றோலிய மற்றும் இயற்கை வாயுப் படிமம் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பெற்றோலியப் பொருட்கள் மற்றும் இயற்கை வாயுக்களை உற்பத்தி செய்வதன் மூலம் உள்ளூர் தேவைகளுக்கு சுவட்டு எரிபொருட்களின் நிறுவனங்கள் மீது தங்கியிருக்கும் நிலையைக் குறிப்பதற்கும், எதிர்காலத்தில் இயற்கை வாயு ஏற்றுமதியாளராக மாறுவதன் மூலம் அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக் கிடைக்கும்.

'இலங்கையில் இயற்கை வாயுக்கள் தொடர்பான தேசிய கொள்ளைப் பிரகடனத்தின்' மூலம் வெளியிடப்பட்டுள்ளது. கம்பனிகள் சட்டத்தின் கீழ் 'தேசிய பெற்றோலிய மற்றும் வாயுக்கள் கம்பனியை நிறுவுவதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 06. டிஜிட்டல் வங்கி முறைமை, ப்லொக்செயின் (Block chain)

தொழிநுட்பம் மற்றும் க்ரிப்டோகரன்சி (Crypto Currency) தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கை சமர்ப்பித்தல்

டிஜிட்டல் வங்கி முறைமை, ப்லொக்செயின் (Block chain) தொழிநுட்பம் மற்றும் க்ரிப்ரோகரன்சி (Crypto Currency) தொடர்பான கம்பனிகளுக்கு முதலீடுகளைக் கவர்ந்திழுப்பதற்காக விதிக்கக்கூடிய சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பாக அமைச்சரவைக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமிப்பதற்காக அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எட்டுப் பேர் அடங்கிய இக்குழுவின் இறுதி அறிக்கை 2022 ஜூன் 30 ஆம் திகதி சமர்ப்பிப்பதற்கும், குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக குறித்த துறைகளில் செயலாற்றும் தொழிநுட்ப வல்லுநர்கள் இருவரை உறுப்பினர்களாக நியமிப்பதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 07. உப- மின் நிலையங்களை மேம்படுத்தல்

அம்பலாங்கொட மற்றும் பன்னலவில் அமைந்துள்ள உப மின் நிலையங்களை மேம்படுத்துவதற்கும் மேலதிக மின்மாற்றி 2 இனை விநியோகிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக தனியொரு கட்டமாக இரட்டை ரக முறையின் கீழ் தேசிய போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளதுடன், 04 போட்டி விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த ஒப்பந்தத்தை சிலக்ஸ் இன்ஜினியரிங்; தனியார் கம்பனிக்கு வழங்குவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 08. இயந்திரத்தொகுதியை கொள்வனவு செய்தல்

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் பெல்வத்த மற்றும் செவனகல அலகுககளில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள இரண்டு (02) சுற்றாடல் நேய உயிர்ம சேதன உரத் தயாரிப்புக் கூடங்களுக்கான இயந்திரத்தொகுதியை அமைக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, இயந்திரத் தொகுதி உபகரணங்களை நேரடி பெறுகை முறைமையைப் பின்பற்றி விநியோகிப்பதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 09. உபகரணங்களுக்கான பெறுகை

இலங்கை துறைமுக அதிகார சபையின் கிழக்கு முனையத்திற்கான கப்பலில் இருந்து தரைக்கு தொழிற்படும் 14 பாரந்தூக்கிகள், தண்டவாளத்தில் பொருத்தி தொழிற்படும் 40 தன்னியக்க சுமைதாங்கிகள் மற்றும் கொள்கலன்கள் ஏற்றிச் செல்லும் 30 வாகனங்கள் பெறுகைக்காக அங்கிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

அதற்காக சர்வதேச போட்டி விலைமனுக் கோரல் முறைமையைப் பின்பற்றி போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளதுடன், 06 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, பெறுகை ஆட்சேபனை சபையின் பரிந்துரைக்கமைய கப்பலில் இருந்து தரைக்கு தொழிற்படும் 12 பாரந்தூக்கிகள், தண்டவாளத்தில் பொருத்தி தொழிற்படும் 40 தன்னியக்க சுமைதாங்கிகளுக்கான பெறுகையை, ஷன்ஹாயி ஷென்ஹூவா ஹெவி கம்பனிக்கு வழங்குவதற்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 10. கிழக்குக் கொள்கலன் முனையம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்பு துறைமுகத்தின் கீழ் முழுமையாக இயக்கப்படும் முனையமான கிழக்கு கொள்கலன் முனையத்தை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்வதற்காக, இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் ஐஐ ஆம் கட்டத்தின் சிவில் வேலைகளுக்காக சர்வதேச போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது, 03 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விலைமுறிகள் தொடர்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய குறித்த ஒப்பந்தம் அக்ஷன் இன்ஜினியரிங்; கம்பனி மற்றும் சயினா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனி லிமிட்டட் கூட்டு வணிகத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

புதுடெல்லி

### வேளாண் சட்டங்கள் வாபஸ்;

# ஒப்புதல் அளித்தார் பிரதமர் மோடி

மத்திய அரசாங்கம் கொண்டுவந்த வேளாண் சட்டங்களை வாபஸ் பெறுவதாக பிரதமர் மோடி அறிவித்த நிலையில், நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் அதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கம் கொண்டுவந்த மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக, டெல்லி எல்லைகளில் சுமார் ஓராண்டாக தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்த விவகாரத்தில் மத்திய அரசாங்கத்துக்கும், விவசாய சங்கங்களுக்கும் இடையே பலகட்ட பேச்சுவார்த்தை நடந்தும், எவ்வித முடிவும் எட்டப்படவில்லை. இதனையடுத்து கடந்த 19ஆம் திகதி மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறுவதாக பிரதமர் மோடி அறிவித்தார். வேளாண் சட்டங்களை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகள், வரும் 29ஆம் திகதி துவங்கவுள்ளபாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.



இந்நிலையில், பிரதமர் மோடி தலைமையில் டெல்லியில் நேற்று மத்திய அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இதில், வேளாண் சட்டங்களை திரும்பப் பெறுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனையடுத்து வரவுள்ளபாராளுமன்ற கூட்டத்தொடரிலேயே வேளாண் சட்டங்கள் ரத்து செய்யப்படவுள்ளன.

---



## சந்திப்பு...

தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்துள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, தமிழக முதலமைச்சர் மு.கா.ஸ்டாலினை தமிழகத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

---

சென்னை

# தமிழ்நாடு ஆளுநருடன் பன்னீர்செல்வம் சந்திப்பு

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என் ரவியை அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஒருங்கிணைப்பாளர் ஓ பன்னீர்செல்வம் நேற்று நேரில் சந்தித்தார். இந்த சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் பெரிய விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாடு ஆளுநராக பதவி ஏற்றபின் ஆளுநர் ஆர்.என் ரவி பல்வேறு அரசியல் தலைவர்களை சந்தித்து வருகிறார். முதலமைச்சருடன் இரண்டு முறை சந்திப்பு நடத்தினார். அதோடு சென்னை வெள்ளத்தின் போது தொலைபேசி மூலம் முதலமைச்சரிடம் ஆளுநர் உரையாடினார்.

உள்ளாட்சி தேர்தலுக்கு பின்பாக எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகளை சந்தித்தார். இதில் தேர்தல் முறைகேடு, சட்ட ஒழுங்கு பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநரிடம் அதிமுகவினர் புகார் அளித்தனர்.

இதில் அதிமுக உட்கட்சி பூசல் குறித்து எதுவும் பேசப்பட்டு இருக்குமோ என்ற கேள்விகள் எழுந்துள்ளன. ஏனென்றால் ஜெயலலிதா மறைவுக்குப் பின்பாக இருந்தே அதிமுகவில் பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் ஆளுநர் வழியாக டெல்லி மேலிடத்திடம் அதிமுக தலைவர்கள் பேசுவது வழக்கமாகி வருகிறது. இந்த மீட்டிங்கும் அப்படி ஒரு சந்திப்பாக இருக்குமோ என்ற கேள்வி எழுந்துள்ளது.



---

புதுடெல்லி

# சிரியா போல மாறும் கேரளா

அன்றாடம் கொலைகள் நிகழும் சிரியா போல கேரளா மாறி வருவதாக பாரதிய ஜனதா கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

சமீபத்தில் நடந்த ஆர்.எஸ்.எஸ்., தொண்டர் சஞ்சித் கொலை வழக்கில், பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியாவின் துணை அமைப்பான இந்திய சமூக ஜனநாயக முன்னணியை சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து கேரள பா.ஜ., தலைவர் கே. சுரேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சிரியா போல கேரளாவும் கொலைகளமாக மாறி வருகிறது. பா.ஜ., ஆர்.எஸ்.எஸ்., ஆதரவாளர்கள் குறி வைத்து தாக்கப்படுகின்றனர். ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூணிஸ்ட் கட்சிக்கும் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்புக்கும் இரகசிய உறவு உள்ளது.

மாநிலத்தில் பயங்கரவாத அமைப்புகளுக்கு




காங்கிரஸுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிட் கட்சியும் ஆதரவளிக்கின்றன. மக்களுக்கு கேரள பொலிஸார் மீது இருந்த நம்பிக்கை போய் விட்டது. கேரளாவின் நிலை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து விளக்கியுள்ளோம்.

கேரள உணவகங்களில் 'ஹலால்' என்ற விளம்பர பலகைகள் வைக்கப்படுவதை வன்மையாக கண்டிக்கிறோம். இது, உணவு என்ற பெயரில் மக்களை பிரிக்க, சில மதவெறி குழுக்கள் இணைந்து செய்து வரும் சதிச் செயலாகும். உடனடியாக ஹலால் விளம்பர பலகைகளை அகற்ற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

---

சென்னை

# உயர்ந்த இடத்தில் அமர வேண்டிய ராமதாஸ் சுருங்கி கிடக்கிறார்

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ், அகில இந்திய அளவில் கன்ஷிராம் போன்ற உயர்ந்த தலைவர் இடத்தில் அமர வேண்டியவர் இப்போது 60 சீட்டுக்கள் என்று சுருங்கி கிடக்கிறார்" என்றும் உயர்ந்த தலைவர் இடத்தில் அமர வேண்டியவர் இப்போது 60 சீட்டுக்கள் என்று சுருங்கி கிடக்கிறார் (வி.சி.க) தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்

திரிபுரா மாநிலத்தில் இடதுசாரிகள் மற்றும் இசுலாமியர்கள் மீதும் பாரதிய ஜனதாவினர் நடத்திய வன்முறையைக் கண்டித்து சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மதச் சார்பற்ற கட்சிகளை ஒருங்கிணைத்து கண்டன ஆர்ப்பாட்டம் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் நடைபெற்றது.



இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சி மட்டுமல்லாது காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் , இந்திய கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகளும் கலந்துகொண்டன.

அப்போது பேசிய விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், "உள்ளாட்சி

> **பா.ஜ.கவின் செயல்பாட்டை சங்பரிவார் அமைப்பே முடிவு செய்கிறது. வேளாண் சட்ட திரும்ப பெறுதலில் சங்பரிவார் முடிவு இருக்குமென்று வி.சி.க தலைவர் திருமாளவன் தெரிவித்தார். உயர்ந்த தலைவர் இடத்தில் அமர வேண்டியவர் இப்போது 60 சீட்டுக்கள் என்று சுருங்கி கிடக்கிறார்**

தேர்தலுக்கான வன்முறை திரிபுராவில் நடந்துள்ளது. கடந்த இடதுசாரிகளின் ஆட்சி வரலாற்றை அழிக்கும் வகையில் சிலைகளை உடைக்கும் செயலில் பா.ஜ.க ஈடுபட்டு வருகிறது. சங்பரிவார் அமைப்புகளின் செயல்திட்டம் தான் பா.ஜ.க செயல்படுத்தி வருகிறது. அதனால் தான் பாஜகவை எதிர்க்கிறோம். பாஜகவின் செயல்பாட்டை சங்பரிவார் அமைப்பே முடிவு செய்கிறது என்றார்.

ஐரோப்பா

# மேலும் 7 லட்சம் பேர் உயிரிழக்கும் அபாயம்



இன்னும் சில மாதங்களில் ஐரோப்பாவின் 53 நாடுகளில் மேலும் 7 லட்சம் பேர் கொரோனாத் தொற்றினால் உயிரிழக்கும் அபாயம் நிலவி வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கொரோனாவுக்கு எதிரான மக்களின் நோயெதிர்ப்புத் திறன் குறைந்து வருவதற்கான ஆதாரங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அதனைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் ஒரு பகுதியாக இன்னும் அதிகமானவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும்.

இரு தவணை கொரோனா தடுப்பூசிகளுக்குப் பிறகு 3-ஆவதாக 'பூஸ்டர்' தடுப்பூசிகளைப் பெறுவதற்கு, 60 வயதுக்கு மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் போன்ற மரண அபாயம் நிறைந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



பிரேஸில்

## தன்னை தானே விவாகரத்து செய்த பிரபலம்

பிரேஸிலை சேர்ந்த மொடல் அழகியான கிறிஸ் கலேரா (Cris Galera) கடந்த செப்டெம்பர் மாதம் தன்னைதானே திருமணம் செய்துகொண்டு பரபரப்பு ஏற்படுத்தினார்.

31 வயதான கலேரா கடந்த காலங்களில் உறவு முறிவுகளால் ஏற்பட்ட விரக்தி காரணமாக பிரபல கத்தோலிக்க தேவாலயத்தில் தன்னை தானே திருமணம் செய்துகொண்டார்.

இந்நிலையில் திருமணம் செய்து 3 மாதங்கள் ஆகவுள்ள நிலையில் தற்போது தன்னை தானே விவாகரத்து செய்வதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து மனம் திறந்த அவர் "எனக்கு இப்போது காதல் மீது நம்பிக்கை வந்துவிட்டது. காதல் என்றால் என்ன என்று தெரிந்து கொண்டேன். நான் என்னுடைய கனவு மனிதரை சந்தித்துவிட்டேன். அவரை பார்த்தபிறகுதான் இந்த நம்பிக்கை எனக்குள் வந்தது..அதனால், நான் என்னை திருமணம் செய்து கொண்டதை விவாகரத்து செய்கிறேன்" என்று கூறியுள்ளார்.

அவரது இந்த அறிவிப்பானது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இதற்கு ஏராளமான கருத்துக்களை இணையவாசிகள் பதிவிட்டு வருகின்றனர்.. மேலும் அவரது புது காதலுக்கு, தங்கள் வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

பிரான்ஸ்

## ஏலத்தில் ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாடு



இயற்பியலில் பல சாதனைகள் புரிந்த விஞ்ஞானிகளில் முக்கியமானவர் அல்பர்ட் ஐன்ஸ்டீன். இவரது சார்பியல் கோட்பாடு இப்போதும் இயற்பியலில் ஒரு மைல்கல்லாக உள்ளது.

இக் கோட்பாட்டை ஐன்ஸ்டீன் மற்றும் அவரது நண்பர் பெஸ்ஸோ இணைந்து கடந்த 1913 முதல் 1914ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்குள் எழுதியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் ஐன்ஸ்டீனின் கைப்பட எழுதிய குறித் சார்பியல் கோட்பாடானது பிரான்ஸின் தலைநகர் பரீஸில் அண்மையில் ஏலத்திற்கு விடப்பட்டது.

பலரும் முண்டியடித்துக் கொண்டு ஏலத்தில் போட்டியிட்ட நிலையில் இறுதியாக அக் கையெழுத்து பிரதி 11 மில்லியன் யூரோவுக்கு (இலங்கை மதிப்பில் சுமார் 250 கோடியே 51 இலட்சம்) ஏலம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தாலி

## அப்பிள், அமேசானுக்கு அபராதம்




தங்கள் நாட்டுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தை மீறி வணிகம் செய்ததாக இத்தாலி அரசு அப்பிள் மற்றும் அமேசான் நிறுவனங்களுக்கு அபராதம் விதித்துள்ளது.

உலகமயமாக்கல் காரணமாக பல்வேறு சர்வதேச நிறுவனங்கள்மற்றும் பல்வேறு நாடுகளிலும் வணிகம் செய்தாலும் கூட இத்தாலியில் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு ஒப்பந்தப்படியே செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது.

மேலும் அந்நாட்டில் ஒப்பந்த விதிகளை கண்காணிக்க நம்பிக்கை விதிமீறல் ஆணையமும் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் இத்தாலியில் அப்பிள் மற்றும் அமேசான் நிறுவனங்கள் அரசுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தை மீறி வணிக செயல்பாடுகளில் ஈடுபட்டதாக அமேசானுக்கு 68.7 மில்லியன் டொலர்களும், அப்பிள் நிறுவனத்திற்கு 134.5 மில்லியன் டொலர்களும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## மருத்துவ சாதனங்களில் இனப் பாகுபாடு?



பிரித்தானியாவில் மருத்துவச் சாதனங்கள் சிலவற்றில் இனப் பாகுபாடு காணப்படுவதாக வெளியாகியுள்ள செய்திகள் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக நோயாளிகளின் இரத்தத்தில் உள்ள ஒட்சிசனின் அளவைக் கணக்கிடும் ஒக்சிமீட்டர் (Oximeter) உள்ளிட்ட கருவிகள் வெள்ளையான தோல் நிறத்தைக் கொண்டவர்களை விட கருமையான தோல் நிறத்தைக் கொண்டவர்களின் உடலில் துல்லியம் குறைவாக செயல்படுவதாகவும், இதனால் அவர்கள் அதிகம் உயிரிழந்திருப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் பெரும்பாலும் அந்நாட்டில் கிருமித்தொற்றால் மரணமடைந்தோர், தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுவோர் ஆகியோரில் கறுப்பினத்தவர் அல்லது ஏனைய சிறுபான்மை இனத்தவரின் விகிதம் அதிகம் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

பெரும்பாலும் வெள்ளை இனத்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகளில் மருத்துவக் கருவிகள் வடிவமைக்கப்படுவதால் இத்தகைய பாகுபாடு நிலவுவதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

.இந்நிலையில் இவ்விடயம் குறித்து ஆராய அந்நாட்டு சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளதோடு ஜனவரி இறுதியில் இதற்கான தீர்வு அளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## டொல்பினுடன் உடலுறவில் ஈடுபட்ட நபர்

டொல்பின் ஒன்றை காதலித்து வந்த நபர் ஒருவர் அதனுடன் ஆறு மாதம் உறவில் இருந்த விநோத சம்பவம் புளோரிடாவில் இடம்பெற்றுள்ளது.

63 வயதான மால்கம் ப்ரென்னர் என்ற குறித்த நபர் இது குறித்து புத்தகமொன்றையும் எழுதியுள்ளார்.

மால்கம் கடந்த 1970 ஆம் ஆண்டுகளில் சரசோட்டாவில் உள்ள ஒரு கேளிக்கை பூங்காவில் பணிபுரிந்தபோது, அங்கு இருந்த டோலி என்ற டொல்பினுடன் அவருக் தொடர்பு ஏற்பட்டதாகவும், சுமார் 6 மாதங்கள் வரை அதனை காதலித்து வந்ததாகவும், இதன் போது டொல்பினுடன் உடல் ரீதியாக தொடர்பில் இருந்ததாகவும் கூறியுள்ளார். எனினும் பின்நாளில் டோலி வேறொரு இடத்திற்கு மாற்றப்பட்டதாகவும், ஒன்பது மாதங்களுக்குப் பின்னர் அவரது பிரிவை தாங்காமல் தற்கொலை செய்து கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.






மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# வெற்றியை நோக்கி இலங்கை

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் வெற்றியை நோக்கி இலங்கை பயணிக்கிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்தது.

இப்போட்டியின் நேற்றைய நான்காம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 9 விக்கெட்டுகளை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள், எஞ்சிய விக்கெட்டை பிரவீன் ஜெயவிக்கிரமவிடம் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஆரம்பத்திலேயே பதும் நிஸங்கவை ரஹீம் கொர்ன்வோலிடம் இழந்ததுடன், குறிப்பிட்ட நேரத்தில் ஒஷாத பெர்ணான்டோவை ஜோமெல் வொரிக்கானிடம் பறிகொடுத்தது.

எனினும், அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸின் இணைப்பாட்டத்தில் முன்னிலையை அதிகரித்த நிலையில், 83 ஓட்டங்களுடன் கருணாரத்ன கொர்ன்வோலிடம் வீழ்ந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த தனஞ்சய டி சில்வாவும் உடனேயே வொரிக்கானிடம் வீழ்ந்த நிலையில், மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 69, தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், 4 விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றதோடு தமது இனிங்ஸை இலங்கை இடைநிறுத்தியது.

இதையடுத்து தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள், ரமேஷ் மென்டிஸ் (4), லசித் எம்புல்தெனியவிடம் (2) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து.நேற்றைய நான்காம் நாள் ஆட்டமுடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், என்குருமஹ் பொன்னர் 18, ஜோஷுவா டா சில்வா 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.

இன்றைய ஐந்தாவது இறுதி நாளில் இலங்கையின் வெற்றிக்கு 4 விக்கெட்டுகள் தேவையாக உள்ளது.



சம்பியன்ஸ் லீக் தொடர்:

## ஜுவென்டஸை வீழ்த்திய செல்சி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸுடனான குழு எச் போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் செல்சி வென்று இறுதி 16 அணிகளுக்கு இடையிலான விலகல் முறையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

செல்சி சார்பாக, ட்ரெவொஹ் சலோபாஹ், றீஸ் ஜேம்ஸ், கலும் ஹட்ஸன்-ஒடோய், திமோ வேர்னர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவுக்குமிடையிலான குழு ஈ போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்நிலையில், ஸ்பானிய கழகமான செவில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான வொல்வ்ஸ்பேர்க்குடனான குழு ஜி போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் செவில்லா வென்றது. செவில்லா சார்பாக, ஜோன் ஜோர்டான், றாஃபா மிர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, சுவிற்ஸர்லாந்துக் கழகமான யங் போய்ஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், இத்தாலிய சீரி ஏ கழகமான அத்லாண்டாவுக்குமிடையிலான குழு எஃப் போட்டியானது 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. அத்லாண்டா சார்பாக, துவான் ஸப்பட்டா, ஜொஸே லூயிஸ் பலோமினோ, லூயிஸ் முரியெல் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். யங் போய்ஸ் சார்பாக, தியோஸன் சைபட்செயு, வின்சென்ட் சியர்ரோ, சில்வன் ஹெஃப்டி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், ஸ்பானிய கழகமான வில்லாறியலின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற குழு எஃப் போட்டியில் அவ்வணியை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் 2-0 என்ற கோல் கணக்கில் வென்று விலகல முறையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றது. யுனைட்டெட் சார்பாக, கிறிஸ்டியானோ றொனால்டோ, ஜடோன் சஞ்சோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்

இந்தியா எதிர் நியூசிலாந்து:

## இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்



இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரானது, கான்பூரில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது டெஸ்டுடன் ஆரம்பிக்கவுள்ளது.

இந்திய அணித்தலைவர் விராட் கோலி, றோஹித் ஷர்மா, மொஹமட் ஷமி, ஜஸ்பிரிட் பும்ரா, றிஷப் பண்ட் ஆகியோருக்கு இத்தொடரில் ஓய்வளிக்கப்பட்டுள்ள நிலையில், ஷ்ரேயாஸ் ஐயருடன், சூரியகுமார் யாதவ்வும் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது. ஏனெனில், காயம் காரணமாக லோகேஷ் ராகுலும் இத்தொடரிலிருந்து விலகியுள்ளார். வேகப்பந்துவீச்சாளர்களாக மொஹமட் சிராஜ்ஜும், இஷாந்த் ஷர்மாவும் விளையாடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## யுனைட்டெட்டின் இடைக்கால முகாமையாளராக வல்வெர்டே?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டானது, இடைக்கால முகாமையாளர் பதவி குறித்து ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவின் முன்னாள் முகாமையாளர் எர்னெஸ்டோ வல்வேர்டேயைத் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில், யுனைட்டெட் நிரந்தர முகாமையாளரை பருவகால முடிவில் நியமிக்கும் வரையில் யுனைட்டெட்டை பொறுப்பில் வல்வேர்டே எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முகாமையாளர் மௌரிசியோ பொச்செட்டினோவை பதவியில் அமர்த்துவது உடனடியாக சாத்தியமில்லை என யுனைட்டெட் உணர்ந்ததாலேயே இம்முடிவுக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 25 நவம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.